நல்லூர் [illegible] நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper    பக்கங்கள் 06    விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    ஆவணி 13    [29-08-1993]    ஞாயிற்றுக்கிழமை    ஓசை 192

## இரண்டாவது நீதிமன்றம் சாவகச்சேரியில் திறப்பு

தமிழீழத்தின் இரண்டாவது நீதிமன்றம் நேற்றுக்காலை சாவகச்சேரி சரஸ்வதி பூங்காவில் திறந்துவைக்கப்பட்டது. தென்மராட்சி கோட்ட அரசியல் பொறுப்பாளர் திரு சுந்தண்ணா தலைமையில் நடைபெற்ற இத் திறப்பு விழாவில் காவல்துறையினரின் அணிவகுப்பு இடம்பெற்றதை தொடர்ந்து தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் நடேசன் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். மங்கள விளக்கை மாணவர் அமைப்பு பொறுப்பாளர் இன்பன் ஏற்றிவைத்ததை தொடர்ந்து சாவகச்சேரி நீதிமன்றத்தினை செஞ்சோலைப் பொறுப்பாளர் செல்வி ஜனனி திறந்துவைத்தார். நேற்று சாவகச்சேரி நீதிமன்றம் திறக்கப்பட்டமுதல் நாளில் ஏழு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ் விசாரணைகளுக்கு நீதியாளர்களாக சுகிர்தா, சர்வா, கல்கி ஆகியோர் கலந்து கொண்டனர். முதலில் அனுமதியின்றி மதுபானம் விற்ற இருவர் மீது விசாரணை நடைபெற்றது. இவர்கள் குற்றத்தை (5ஆம் பக்கம்பார்க்க)

## (தெல்லிப்பழை துர்க்கை அம்மன்)

# ஆலயம் மீது அகோர எறிகணை வீச்சு; பக்தர்கள் நால்வர் துடிதுடித்துப் பலி

## ஐந்து அடியார்கள் படுகாயம்

[தெல்லிப்பழை]

**தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதலில் அன்னதானப் பணியில் ஈடுபட்டிருந்த தொண்டர்கள் இருவர் உட்பட நான்கு பக்தர்கள் கொல்லப்பட்டனர். ஆறு பேர் படுகாயமடைந்தனர். கோவில் கல்யாண மண்டபமும், அன்னதான மடமும் சேதமடைந்தன.**

தற்பொழுது வருடாந்த உற்சவம் நடைபெற்றுவரும் துர்க்கையம்மன் ஆலயத்தில் நேற்று சப்பறத் திருவிழா ஆகும். இதன் காரணமாக எறிகணை வீச்சு இடம்பெற்ற வேளையில் பெருமளவு பக்தர்கள் ஆலயத்தில் கூடி நின்றனர்.

காலை சுமார் 9.20 மணி தொடக்கம் துர்க்கைஅம்மன் ஆலயத்தின் மீதும் அதைச் சூழவுள்ள பகுதிமீது தொடர்ச்சியாக இவ் எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது. சுமார் அரை மணி நேரத்திற்குள் பதினைந்துக்கும் மேற்பட்ட எறிகணைகள் வீசப்பட்டன.

இவ்வாறாக வீசப்பட்ட எறிகணைகளில், பல ஆலயத்தின் வெளி வீதிகளிலும் வீழ்ந்து வெடித்தன.

இதில் ஆலய கல்யாண மண்டபத்தில் வீழ்ந்து வெடித்த எறிகணையினாலேயே நால்வர் கொல்லப்பட்டனர். ஏனையோர் காயமடைந்தனர்.

கொல்லப்பட்டவர்களில் மூவர் அன்னதானப் பணியில் ஈடுபட்டிருந்த தொண்டர்கள் ஆவர். மற்றைய பெண்மணி யூனியன்கல்லூரி ஆசிரியையாவார்.

இதேவேளை, எறிகணை வீச்சு இடம்பெறத் தொடங்கியதை அடுத்து ஆலயத்திற்கு வருகை தந்திருந்தோர் கோபுரவாயிலிலும், ஆலயதேர் முட்டிக்குகீழும் தஞ்சம் அடைந் (6ஆம் பக்கம் பார்க்க)

## தெல்லிப்பழை நோக்கி மாலையில் மீண்டும் தாக்குதல்

### ஒருவர் பலி; ஆறுபேர் காயம்

[நமது நிருபர்]

த்தின் கீழ் அமர்ந்திருந்த அதே ...

சாத்தனாவத்தையைச் சேர் ...

## சடலங்கள் ஒப்படைப்பு


(பருத்தித்துறை)

கிளாலிக் கடலில் கரும்புலிகள் நடாத்திய தாக்குதலின் போது கைப்பற்றப்பட்ட 4 சிறிலங்கா கடற்படையினரது சடலங்களையும் விடுதலைப் புலிகள் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 6-30 மணியளவில் பருத்தித் துறையில் வைத்து இச் சடலங்கள் ஒப்படைக்கப்பட்டன. யாழ். அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி இச் சடலங்களை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதி அலெக்ஸ் அவர்களிடம் ஒப்படைத்தார்.

## தேர்த் திருவிழா நடைபெறும்

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம் மீது நேற்று படையினர் எறிகணை வீச்சு ...



சாவகச்சேரியில் நீதிமன்றம் நேற்று திறந்து வைக்கப்பட்டு முதலாவது வழக்கு விசாரணை நடைபெறுவதை படத்தில் காணலாம்.

கொண்ட கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதலில் அன்னதானப் பணியில் ஈடுபட்டிருந்த தொண்டர்கள் இருவர் உட்பட நான்கு பக்தர்கள் கொல்லப்பட்டனர். ஆறு பேர் படுகாயமடைந்தனர். கோவில் கல்யாண மண்டபமும், அன்னதான மடமும் சேதமடைந்தன.

தற்பொழுது வருடாந்த உற்சவம் நடைபெற்று வரும் துர்க்கையம்மன் ஆலயத்தில் நேற்று சப்பறத் திருவிழா ஆகும். இதன் காரணமாக எறிகணை வீச்சு இடம்பெற்ற வேளையில் பெருமளவு பக்தர்கள் ஆலயத்தில் கூடி நின்றனர்.

காலை சுமார் 9.20 மணி தொடக்கம் துர்க்கைஅம்மன் ஆலயத்தின் மீதும் அதைச் சூழவுள்ள பகுதிமீது தொடர்ச்சியாக இவ் எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது. சுமார் அரை மணி நேரத்திற்குள் பதினைந்துக்கும் மேற்பட்ட எறிகணைகள் வீசப்பட்டன.

இவ்வாறாக வீசப்பட்ட எறிகணைகளில், பல ஆலயத்தின் வெளி வீதிகளிலும் வீழ்ந்து வெடித்தன.

இதில் ஆலய கல்யாண மண்டபத்தில் வீழ்ந்து வெடித்த எறிகணையினாலேயே நால்வர் கொல்லப்பட்டனர். ஏனையோர் காயமடைந்தனர்.

கொல்லப்பட்டவர்களில் மூவர் அன்னதானப் பணியில் ஈடுபட்டிருந்த தொண்டர்கள் ஆவர். மற்றைய பெண்மணி யூனியன்கல்லூரி ஆசிரியையாவார்.

இதேவேளை, எறிகணை வீச்சு இடம்பெறத் தொடங்கியதை அடுத்து ஆலயத்திற்கு வருகை தந்திருந்தோர் கோபுரவாயிலிலும், ஆலயதேர் முட்டிக்குகீழும் தஞ்சம் அடைந்

(6ஆம் பக்கம் பார்க்க)

## தேர்த் திருவிழா நடைபெறும்

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம் மீது நேற்று படையினர் எறிகணை வீச்சு நடத்தி அனர்த்தம் விளைவித்தபோதிலும் இன்று திட்டமிட்டபடிவழமைபோல் தேர்த் திருவிழா நடைபெறும் என தேவஸ்தான சபையினர் அறிவித்துள்ளனர். பிராயச்சித்த கிரியைகளை அடுத்து இன்று காலை தேர்த் திருவிழா நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

# தெல்லிப்பழை நோக்கி மாலையில் மீண்டும் தாக்குதல்

## ஒருவர் பலி; ஆறுபேர் காயம்

[நமது நிருபர்]

பலாலி பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் மீண்டும் நேற்று மாலை தெல்லிப்பழை பகுதிகளை நோக்கி மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்களால் ஒருவர் பலியானதுடன் ஆறு பேர் படுகாயமடைந்தனர். வைரவர் ஆலயம் ஒன்றும் சேதமடைந்தது.

நேற்று மாலை 4.00 மணியளவில் ஏவப்பட்ட எறிகணை ஒன்று வீழ்ந்து வெடித்ததில் வைரவர் கோவில் ஒன்று சேதமடைந்தது.

தொடர்ந்து மாலை 5.15 மணியளவில் அடுத்தடுத்து மூன்று எறிகணைகள் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி ஏவப்பட்டன. இதில் முதலாவது எறிகணை தெல்லிப்பழை கிழக்கு பகுதியில் வீழ்ந்து வெடித்தது. இதனால் ஆலமரத்தின் கீழ் அமர்ந்திருந்த அதே இடத்தைச் சேர்ந்த நாகமுத்து கற்பகராசா [வயது 25] சடையர் சிவலிங்கம் [வயது 34] முருகன் தவபாலன் (வயது37) மற்றும் ஏழாலை வடக்கைச் சேர்ந்த நல்லையா குமாரலிங்கம் [வயது 34] ஆகியோர் காயமடைந்தனர்

இரண்டாவது எறிகணையினால் தெல்லிப்பழை கிழக்கு சாத்தனாவத்தையைச் சேர்ந்த சின்னத்தம்பி செல்வரதினம் [வயது40] பலியானார். மல்லாகம் நீதிமன்றத்திற்கு அண்மையில் வீழ்ந்து வெடித்த மற்றைய எறிகணையால் மல்லாகத்தைச் சேர்ந்த நாகராஜா தனலட்சுமி [வயது 48] மற்றும் விஜயகுமாரன் நந்தினி [ 30 ] ஆகியோர் காயமடைந்தனர்.


# அச்சுவேலியில் ஷெல் வீச்சு இளம்பெண்பலிமூவர்காயம்

(நமது நிருபர்]

பலாலி பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று இரவு அச்சுவேலி பகுதியை நோக்கி அகோர எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர். இதில் யுவதி ஒருவர் சிதறிப் பலியானதுடன், இரு சகோதரர்கள் உட்பட மூவர் படுகாயமடைந்தனர்.

நேற்று இரவு 7 மணியளவில் பத்தமேனி பிள்ளையார் கோவிலடிப் பகுதியில் வீழ்ந்து வெடித்த எறிகணை ஒன்றினால் வீதியில் சென்றுகொண்டிருந்த விமலதாசன் விஜயராணி (வயது 24) ஸ்தலத்திலேயே சிதறிப் பலியானார். இவரது சகோதரர்களான சுபாசினி (வயது 15), துதிமதி (வயது 21) ஆகியோரும், சிவஞானம் துஷ்யந்தி (வயது16) என்பவரும் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்த இம் மூவரும் சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயப்பகுதியில் சிறிலங்கா படையினரின் எறிகணை வீச்சில் பலியான ஒருவரின் சடலம்.

## கிளாலி - பூநகரி படகுச்சேவை

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறுமென யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.



சாவகச்சேரியில் நீதிமன்றம் நேற்று திறந்து வைக்கப்பட்டு முதலாவது வழக்கு விசாரணை நடைபெறுவதை படத்தில் காணலாம்.

# இராணுவத்தின் முயற்சி புலிகளால் முறியடிப்பு

[தெல்லிப்பழை)

தெல்லிப்பழைப் பகுதியில் நிலைகொண்டிருந்தசிறிலங்கா இராணுவத்தினர் தமது நிலைகளிலிருந்து முன்னேற எடுத்த முயற்சி விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது.

நேற்றுக்காலை 8 மணியளவில் தெல்லிப்பழை இராணுவத்தினர் தமது காவல் நிலைகளிலிருந்து முன்னேற முற்பட்டனர். இதன்போது விடுதலைப்புலிகள் இராணுவத்தினருக்கு எதிராக பலத்த தாக்குதலை மேற்கொண்டனர்.

விடுதலைப்புலிகளின் எதிர்த் தாக்குதலுக்கு ஈடுகொடுத்து படையினர் முன்னேற உதவியாக இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் அப் பகுதிகளில் தாக்குதல்களை மேற்கொண்டன.

இருமுனைத் தாக்குதல் நடாத்தியும் முன்னேற முயன்ற படையினர் மீது புலிகளின் தாக்குதல் அதிகரிக்கவே படையினர் தமது முயற்சியைக் கைவிட்டு முகாம் திரும்பினர். இதன்போது பலாலி

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வங்காலை படையினரின் முயற்சி முறியடிக்கப்பட்டது

நேற்றுக் காலை மன்னார் மாவட்டத்தில் வங்காலை. சிறுநாவற்குளம் முகாம்களிலிருந்து முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீ விடுதலைப புலிகள் தாக்குதல் நடத்தினர்.

காலை 7.00 மணியளவில் இம்முகாம்களிலிருந்து கவச வண்டிகளின் உதவியுடன் படையினர் முதலைகுத்தி கிராமத்தை நோக்கிமுன்னேற முயன்ற போது இவர்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். இதையடுத்து காலை 10 00 மணியளவில் படையினர் பின்வாங்கிச் சென்றுவிட்டனர். இத்தாக்குதலில் படையினருக்கு ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

# சதையின் சிதறலும், இரத்தமுமாக கல்யாண மண்டபம் காணப்பட்டது

(நமது நிருபர்)

எறிகணை வீச்சு செய்ததைத் தொடர்ந்து உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்த எமது செய்தியாளர் பக்தர்கள் நிரம்பிவழியும் அப் பிரதேசம் ஆளரவமற்ற சூனியப்பிரதேசமாகக் காட்சி அளித்ததாகக் குறிபிட்டுள்ளார்.

ஆலயவீதிகளில் இரத்தம் தோய்ந்த கைக்குட்டைகளும், துணிகளும் காணப்பட்டதாகவும், கல்யாணமண்டபத்தினுள் காயமடைந்தவர்களைக் கொண்டு சென்றதனால் அம் மண்டபத்தின் உள்ளே ஓரே இரத்த வெள்ளமும் திட்டுத்திட்டாக சதைகளுமாக காட்சியளித்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

வழமையாக நடைபெறும் அன்னதானத்திற்கான சமையல் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த இடத்திற்கு சமீபமாக ஷெல் வீழ்ந்து வெடித்ததால் அடுப்பில் வைக்கப்பட்டிருந்த சோறு கறிகள் நிரம்பியகிடாரங்கள் தூக்கிவீசப்பட்டும் சில அடுப்பில் தொட

(5 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

உடன்
விற்பனைக்குண்டு

2 மாதம் வளர்ந்த பிறவுண் சேவல் உடன் விற்பனைக் குண்டு மல்லிகாபதி' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (5793)

## வீரவணக்கக் கூட்டம்

(தென்மராட்சி)

தென்மராட்சி கோட்டத்தில் சாவகச்சேரி வட்டத்தில் 7-ஆம் 8 ஆம் மாதங்களில் வீரச்சாவு எய்திய மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று 29 ஆம் திகதி இரவு 8 மணிக்கு மட்டுவில் மகாவித்தியாலயத்தில் இடம்பெறும். இதில் விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொள்வர் தென்மராட்சி கலை பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் இறுதியில் நடைபெறும். (86)

## விபத்து

(குருநகர்)

சிற்றூர்தி சேவை வாகனமும் துவிச்சக்கர வண்டியும் மோதியதில் துவிச்சக்கர வண்டியில் வந்த தாயும். மகளும் பலத்த காயமடைந்தனர்.

இச்சம்பவம் கடந்த வியாழன் அன்று காலை யாழ் கட்டைப்பிராய் பிரதான வீதியில் நடைபெற்றது.

கிளை வீதியால் பிரதான வீதிக்கு துவிச்சக்கர வண்டியில் வந்த மகளும் தாயும் வேகமாக வந்து கொண்டிருந்த சிற்றூர்தி சேவை வாகனத்தைக் கண்டு செய்வதறியாது நடு வீதியில் தரித்து நின்றதால் விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

வாகனத்துடன் மோதுண்டு படுகாயமடைந்த நிலையில் தாயும், மகளும் யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். (21)

### சிரமதானப்பணிமூலம் துப்பரவு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை இந்து இடுகாடு பரிபாலன சபையின் காணி அண்மையில் பரிபாலன சபையினரால் பற்றைகள் வெட்டித் துப்புரவு செய்து வேலிக் கதியால்களுக்கு சிரமதான அடிப்படையில் தண்ணீர்

---

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் வழங்கும்

## முழுநிலா நாள் அறிவியல் அரங்கு

31-08-1993 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

பி.ப 3-30—4-30 மணி

"சமகால உலக விவகாரங்கள்பற்றிய ஒரு கண்ணோட்டம்"

திரு சமாதிலிங்கம் சத்தியசீலன்
(சிரேஷ்ட விரிவுரையாளர். வரலாற்றுத்துறை. யாழ் பல்கலைக்கழகம்)

பி.ப 4-30—5-30 மணி

"ஓவியத்துறையில் பிரதிமை"

ஓவியர் க. இராசரட்ணம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாலசுப்பிரமணியம் தவபாலன்
செயலர்

(சி-7250)

---

நாடு வாழத் தனையீந்த நாயகனின் திறம் போற்றும்

## 45-ம் நாள் நினைவலைகள்



அரும்பாக
8 9 1969

விதையாக
16.7.1993

### லெப். கோபால்

[கந்தையா-கோபாலன், சங்கத்தானை]

பண்டத்தரிப்பிலே நிலைகொண்ட
பாதகரின் முகாம் தகர்க்கத்
துண்ணென்று விரைந்த எங்கள்
தூயவனே! சுடர் மதியே!
கண்ணான தமிழீழக்
கனவுகளைச் சுமந்து நின்று
திண்மையுடன் போர் விளைத்து
திசையெல்லாம் ஆடி நின்றாய்!
மண்மீட்க உனையீந்து
மகிமை பல பெற்றுயர்ந்து
விண்ணோக்கிக்கோபாலா
வேங்கையே சென்றனையோ?
கண்ணீர் மழைசொரிந்து
கண்ணே உனை அஞ்சலித்தோம்!
காட்டிவைத்த உன்வழியே நாம் வருவோம்

---

## அறிவித்தல்

வடஇலங்கைச் சங்கீதசபை–அறிமுறைத்தேர்வு–1993
தேர்வு நிலைய இடமாற்றம்

யாழ் இந்து மகளிர் கல்லூரியில் 1993.09 04, 1993 09 05 (சனி, ஞாயிறு) திகதிகளில் நடத்துவதற்கு ஒழுங்குசெய்யப்பட்ட மேற்படி தேர்வு, யாழ் இந்துக் கல்லூரியில் நடத்துவதற்கு முடிவுசெய்யப்பட்டுள்ளது என்பதைத் தேர்வு நாடிகளுக்கு அறியத்தருகிறேன். ஏனைய தேர்வு நிலையங்களில் எவ்வித மாற்றங்களும் செய்யப்படவில்லை என்பதையும் அறியத்தருகிறேன்.

இ. சுந்தரலிங்கம்,
யாழ்மாவட்டக் கல்விப்பணிப்பாளரும்,
வடஇலங்கைச் சங்கீதசபைத் தலைவரும்.

(சி-7299)

---

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை லிங்கம்

[பாலசுப்பிரமணியம் சந்திரலிங்கம்]

பருத்தித்துறை

மலர்வு: 29.05.1969
வீரச்சாவு: 29.08.1989

தாயினும் நிகரான - தமிழீழ
தாயகத்தை மீட்டிடவே
தணியாத தாகத்துடன்
தலைவன் வழி நடந்தீரே.

---

நீங்காத நினைவலைகள்

## 45-ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிரியை அழைப்பும்



அன்னை மடியில்
06 01-1972

தாயக மண்ணில்
16-07-1993

### லெப். புனிதன்

[கனகசபை செங்குட்டுவன்]
அம்பிகா களபூமி, காரைநகர்.

காரையம்பதிசேர் பாலாவோடையில்
செந்தமிழ்காக்க வந்த செங்குட்டுவனே!
வீறுகொண்டு மாற்றானை எதிர்கொள்ளச்
சென்றாயே!
தளராத துணிவோடு போராடினாயே!
களம் பல கண்டு நீ கலங்காமல் இருந்தாயே!
அணையாத புகழ்தேடி ஆருயிரை அர்ப்பணித்
தாயே!
அன்பான உனதன்னை தந்தை சோதரர்கள்
உள்ளமதில் என்றென்றும்
நிலைத்திருப்பாயே!

29-08-1993 இன்று அவரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சகோதராளிகளையும் உற்றார், உறவினர் நண்பர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

646, மொசடீன் மொஸ்லேன்.
ஐந்துசந்தி,
யாழ்ப்பாணம்.

(5797)

கனகசபை
குடும்பத்தினர்

---

## நினைவு கூருகின்றோம்... 1993-08-29

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டுநகரில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். சுந்தரம்** (தம்பிப்பிள்ளை அருள்ராஜா - களுவாஞ்சிக்குடி - மட்டு)

1989ஆம் ஆண்டு வல்வெட்டித்துறை - பொலிகண்டி எழுபுளியடி வீதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**லிங்கம்** (பாலசுப்பிரமணியம் சந்திரலிங்கம்-சந்திரலிங்கம் வீதி - பருத்தித்துறை)

நாவாந்துறையில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ் - கொட்டடி, கன்னகிபுரத்தைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1990ஆம் ஆண்டு மூளைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**லெப். பாறூக்** (வெள்ளையன் ஏகாம்பரம் - கோரக்கல்லிமடு. கிரான் - மட்டு)

வேகமாக வந்து கொண்டிருந்த சிற்றூர்தி சேவை வாகனத்தைக் கண்டு செய்வதறியாது நடு வீதியில் தரித்து நின்றதால் விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாகனத்துடன் மோதுண்டு படுகாயமடைந்த நிலையில் தாயும், மகளும் யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

(21)

## சிரமதானப்பணிமூலம் துப்பரவு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை இந்து இடுகாடு பரிபாலன சபையின் காணி அண்மையில் பரிபாலன சபையினரால் பற்றைகள் வெட்டித் துப்புரவு செய்து வேலிக் கதியால்களுக்கு சிரமதான அடிப்படையில் தண்ணீர் ஊற்றி வருவதுடன் மயானத்தைப் பாதுகாத்து துப்புரவு செய்து வருகின்றனர்.

தற்போது இங்குள்ள மடம் புனரமைப்புச் செய்யப்பட்டு அந்தியேட்டிக் கிரியைகளும் நடைபெற்று வருகின்றது.

இங்கு அந்தியேட்டி செய்ய விரும்புவோர் சபைப் பொருளாளர் திரு.சே.எஸ் இராசையாவுடன் நேரில் தொடர்பு கொண்டு பணம் கட்டிப் பற்றுச்சீட்டு பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
(24)

## அகதி முகாமில் புதிய குடிசைகள்

(கொழும்புத்துறை)

மானிப்பாயில் செயல்பட்டு வரும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஜேர்மன் உதவித் திட்டத்தின் கீழ் இடம் பெயர்ந்த மக்களுக்கு புதிதாக 180 குடிசைகளை அமைத்துக் கொடுக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்திற்கு அமைவாக முதற் கட்டமாகமானிப்பாய் செல்லமுத்து அகதிமுகாமில் தங்கியுள்ளவர்களுக்குப் பல புதிய குடிசைகள் அமைக்கும் பணிகள் ஆரம்பமாகித் தொடர்ந்துவேலைகள் துரிதமாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது (24)

## இலவசகல்வி வகுப்பு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை சனசமூக நிலையத்தின் ஆதரவில் மூன்று பெற்றோமாக்ஸ் வெளிச்சத்தில் இலவசக் கல்வி வகுப்பு அண்மையில் நிலையத் தலைவர் திரு.க நடராசா தலைமையில் ஆரம்பிக்கப்பட்டு இரவு 6 30 மணிதொடக்கம் 9.00மணிவரை யாழ்.கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் நடைபெற்று வருவதாக நிலையச் செயலாளர் திரு.க தில்லைநாதன் தெரிவித்துள்ளார். இவ் இலவச கல்வி வகுப்பில் மொத்தம் 126 மாணவர்கள் கல்விகற்று வருகிறார்கள். (24)



# லெப். கோபால்

[கந்தையா-கோபாலன், சங்கத்தானை]

பண்டவணியிலே நிலைகொண்ட
பாதகரின் முகாம் தகர்க்கத்
துணிவுடன் விரைந்த எங்கள்
தூயவனே! சுடர் மதியே!
கண்ணான தமிழீழக்
கனவுகளைச் சுமந்து நின்று
திண்மையுடன் போர் விளைத்து
திசையெல்லாம் ஆடி நின்றாய்!
மண்மீட்க உனையீந்து
மகிமை பல பெற்றுயர்ந்து
விண்ணோக்கிக்கோபாலா
வேங்கையே சென்றனையோ?
கண்ணீர் மழைசொரிந்து
கண்ணே உனை அஞ்சலித்தோம்!
காட்டிவைத்த உன்வழியே நாம் வருவோம்
கண்ணுறங்கு.

இன்று (29 08 93) ஞாயிறு எமது இல்லத்தில் நடைபெறும் 45-ம் நாள் கிரியையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் சகோதரர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

— குடும்பத்தவர்கள்.

சங்கத்தானை
சாவகச்சேரி [5061]

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தமிழ்த்தாயின் மடியில்
30-12 1971

தமிழீழ அன்னை மடியில்
22 08 1991

## வீரவேங்கை அமலன்

(சம்பிரசா சிவகணேசன்)
(புலிகளின்குரல் தொழில்நுட்பப்பிரிவு பொறுப்பாளர்)
பாலையூற்று - திருகோணமலை
திதி 29 08-1993

அமலா! நீ இறக்கவில்லை
முளைக்கின்றாய் மரம்மரமாய்
அமலா! நீ அழியவில்லை
வருகின்றாய் பரம்பரையாய்
அமலா! நீ எங்கள் உயிர்
வாழ்கின்றாய் எம்முடலில்
அமலா! நீ காட்டிய பாதையை
நாம் தொடர்வோம்.

உன் துயரில் வாடும்
குடும்பத்தினர்

தும்பளை வீதி,
பருத்தித்துறை. (5794)



# வீரவேங்கை லிங்கம்

[பாலசுப்பிரமணியம் சந்திரலிங்கம்]
பருத்தித்துறை

மலர்வு:
29.05.1969

வீரச்சாவு:
29.08.1989

தாயினும் நிகரான - தமிழீழ
தாயகத்தை மீட்டிடவே
தணியாத தாகத்துடன்
தலைவன் வழி நடந்தீரே,
சாவினைச் சரித்திரமாக்கி
சாதனை பல புரிந்தீரே.
விடியலுக்கு விளை நிலமாய்
தமிழுக்கே வித்தாகி
தமிழீழச் சொத்தானீர்.
ஆண்டு நாலான போதும் - லிங்கமே
உங்கள் நினைவுடனே வாழ்கின்றோம்.


சந்திரலிங்கம் வீதி,
பருத்தித்துறை
(5787)

மறவாமல் மனமுருகும்,
பெற்றோர், சகோதரிகள்,
உறவினர்கள், நண்பர்கள்,

# 31-ம் நாள் நினைவலைகள்
## 29.8.1993

தோற்றம்
21.8.1928

மறைவு
30.7.1993



அமரர்

## வேலுப்பிள்ளை கந்தையா

[லிகிதர்]

அன்பின் திருவுருவாய் பாசத்தின் ஒளிவிளக்காய் இருந்து திடீரென எம்மை ஆறாத் துயரில் மூழ்கவைத்து மீளாத் துயில் கொண்ட எம் அன்பு தெய்வமே, எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே. உங்கள் ஆத்மா சாந்தி அடைய கண்ணீர் பூக்களால் அர்ச்சிக்கிறோம்

மீனாட்சி அம்மன் கோயில்வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி. (5780)

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# நினைவு கூருகின்றோம்...
## 1993-08-29

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டுநகரில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். சுந்தரம்** (தம்பிப்பிள்ளை அருள்ராஜா - களுவாஞ்சிக்குடி - மட்டு)

1989ஆம் ஆண்டு வல்வெட்டித்துறை - பொலிகண்டி ஏழுபுளியடி வீதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**லிங்கம்** (பாலசுப்பிரமணியம் சந்திரலிங்கம்-சந்திரலிங்கம் வீதி - பருத்தித்துறை)

நாவாந்துறையில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ் - கொட்டடி, கண்ணகிபுரத்தைச் சேர்ந்த தமிழீழவன்.

1990ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**லெப். பாறூக்** (வெள்ளையன் ஏகாம்பரம் - கோரக்கல்லிமடு. கிரான் - மட்டு)

**கப்டன் பாறூக்** (நாச்சிமுத்து நந்தகுமார் - 7-ம் கட்டை அலம்பில் - மணலாறு)

**யசோ** (ஜோண் றொபின்சன் - பிரதானவீதி, இளவாலை - யாழ்)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட மாணவன் உட்பட மாவடி வேம்பு, குமாரவேலிப் பகுதிகளைச் சேர்ந்த 04 தமிழர்கள். வாழைச்சேனை இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்து கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட புதுக்குடியிருப்பைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன். வந்தாறுமூலையில் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன். ஏறாவூர் ஐந்தாம் குறிச்சிப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

ஆழியவளை - தாளைப் பகுதியில் சிறிலங்கா படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1991ஆம் ஆண்டு வவுனியா - பாவற்குளம், ஆவரந்துலாப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**மேஜர் சுசிமாமா** (— - 1-ம் யூனிட், பாவற்குளம் - வவுனியா)

**லெப். குமார்** (சிவசிதம்பரப்பிள்ளை ஜெயந்தன் - வைரவப் புளியங்குளம் - வவுனியா)

முல்லைத்தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் விழுப்புண் அடைந்து சிகிச்சையின்போது வீரச்சாவெய்திய -

**றோய்** (சொக்கலிங்கம் மதிவதனன் - முல்லைத்தீவு - மணலாறு)

மட்டு - மாவடிஓடையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**ரஞ்சிதன்** (இளையதம்பி கந்தசாமி - வாழைச்சேனை - மட்டு)

ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**முகம்மது** (விநாயகம் ஜெயபரன் - அரசசேணி - பளை)

மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். விக்ரர்** (குமாரரட்ணம் சுபாஸ்கரன் - வெல்லாவெளி - மட்டு)

**சிறிதரன்** (சூசைப்பிள்ளை நிக்கலஸ் - இருதயபுரம், மூதூர் - திருமலை)

இதேபகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**அஜந்தன்/கோபு** (மதியாபரணம் தவகாந்தன் - அரியாலை - யாழ்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-7300)

நல்லூர் ... நூலகம் ... யாழ்ப்பாணம்

# தெலலிநகர்த் துர்க்கை தேரேறி வருகிறாள்

அறம் பொலிய அமர்ந்த தெல்லி நகர்த் துர்க்கை ஆத்தாள் வருக வருகவே! என்று கூவி அழைக்கும் அடியார் வெள்ளம் அலைமோத வெள்ளத்தில் மிதந்து வரும் பொன் மேரு மலை போன்ற சித்திரத் தேரினில் பவனி வருகிறாள் அன்னை துர்க்காதேவி இன்று.

ஆம்! அறம் வளர்க்கும் நாயகியாகத் தெல்லிப்பழை உழுகுடைப் பதியில் அருளாட்சி புரியும் எம் அன்னை ஸ்ரீ துர்க்காதேவியின் தேர்த் திருவிழா இன்று.

தேரின் முன்னால் திருவீதி முழுவதும் நான்கு வரிசையாய் நீண்டு, இடைவெளி காணாமல் கொழுந்து விடும் கற்பூர ஜோதி; தேரின் பின்னால் ஊர்ந்து வரும் எண்ணிறந்த அடியவரின் அங்கப் பிரதிஷ்டை; அதைத் தொடரும் எண்ணி அடியிடும் தாய்மாரின் வரிசை... முன்புறம் எது, பின்புறம் எதுவென்று காணமுடியாத இந்த நேர்த்தி வரிசைகளைச் சூழ்ந்து அலைபோல் மோதும் மனிதத் திரள்! இவற்றிடையே தண்ணளி மயமான தேவி; மணிநெடுந் தேரில் பவனி வருகிறாள். காவடியாட்டத்தின் கண்கொள்ளாக் காட்சிகள். கண்ணீர் மல்கப் பாடியாடி வரும் பஜனைக் கோஷ்டி பாட்டொலிகள். ''அம்மா! ஆச்சி! துர்க்கா!'' என்று கூவி அழும் பக்தர் உணர்வின் ஓசைகள்! மெய் சிலிர்க்கும் உயிர் உருகும்! காண ஆயிரம் கண்போதாது! புறக்கண்களை மூடி அகக்கண்களைத் திறந்தால் தெரியும் அன்னை துர்க்கையின் அளப்பருங் கருணை. தெல்லி நகரில் மட்டுமல்லாது இந்தத் தேசமெங்கும் - கடலகடந்தும் உலகமெங்கும் பிரவகித்துப் பரவும் செழுமை புரியும்.

காஞ்சி மா முனிவரின் ஆசியுடனும், குருஜீசுவாமி ஹரிதாஸ்கிரியின் ஆசையுடனும், தமிழ்நாடு விழுப்புரத்தைச் சேர்ந்த ஸ்தபதி திரு. ச.தேவலிங்கம் அவர்கள் நிர்மாணித்த இராஜகோபுரத்தின் சிற்பச் சிலை மலிந்த காம்பீரியமான அழகு. கலாகேசரி ஆ. தம்பித்துரையின் கலை நுட்பம் செறிந்த சித்திரத்தேரின் நயம் நினைத்தாலே பரிசுத்தம் அருளும் துர்க்கா புஷ்கரணி தீர்த்தத் தடாகத்தின் புனிதம் ஓசை கொடுத்த நாயகியாள் மோனப் புன்னகையுடன் வீற்றிருக்கும் கர்ப்பக்கிருகம். 'இதோ பிடி'' என்று அருளமைதியை அள்ளித்தரும் எழுந்தருளி வடிவம். நித்தமும விழாப் பொலிவு காட்டும் வசந்த மண்டபம். பிள்ளையார், கஜலட்சுமி, பாலமுருகன், சந்தானகோபாலன், வைரவர் ஆகியபரிவார மூர்த்தங்களைக் கொண்ட பேராலயம். வாசலிலே வானளாவும் அரசமரம். சூழலெங்கும் தாதிறைக்கும் பொற்கொன்றை, இலுப்பை, வேம்பு மரங்கள். அமுதசுரபிகளாக அடியார்க்கு அன்னமிடும் அன்னதான மண்டபங்கள். எழில் பொருந்திய அன்னபூரணி மண்டபம், சைவத் தமிழ்பேணும்துர்க்காபுரம் மகளிர் இல்லம், இந்து இளைஞர் சங்க அலுவலகம், கலாமண்டபம், அந்தணர் விடுதிகள் என்பனவெல்லாம் கலை மலிந்து காட்சி தரும் இடம் துர்க்காபுரம்.

கொழும்புத்துறை முனிவர் சிவயோகசுவாமிகளின் ஆணைப்படி முறையாக நிகழும் திருமுறைகள் முற்றோதல் புராண படனங்கள், ஆனி உத்தரத்தில் திருவாசக முற்றோதல், ஆடிச்சோதியில் வெள்ளானைச் சருக்கப் படிப்பும், விழாவும், மற்றும் செவ்வாய் தோறும் விசேட தினங்களிலும் துர்க்கா துரந்தரி அவர்கள் இரத்தினச் சுருக்கமாக வழங்கும் அருளுரைகள் என்பன கோயிலை நாடிவரும் அனைவருக்கும் சைவ சாஸ்திர விளக்கங்களையும் தோத்திரப் பயிற்சியையும், அருள் விளக்கத்தையும் படைக்கின்றன. சிவராத்திரி போன்ற தினங்களில் பண்ணிசைகளும், சொற்பொழிவுகளும் நல்விருந்தாக அமைகின்றன. கூட்டு வழிபாடு ஒழுங்குபட அமைந்த சிறப்பு அம்சமாகும்.

எவ்விதமான கேளிக்கைகளும், ஆடம்பரமான ஒலிபெருக்கித் தொல்லைகளும் இல்லாது பக்தி பூர்வமான கூட்டு வழிபாடு. அன்பர்களின் நேர்த்திகளுக்கு மட்டுமே இடமளித்து பூஜைவழிபாட்டுக்கு முழு இடமும் அளிப்பது துர்க்கை அம்மன் ஆலயம்.



பக்தி சிரத்தையும், இயம நியமங்களும் உடைய அந்தணர்கள் சிரத்தையுடன் செய்யும் நித்திய பூஜைகளும், இணுவில் தர்ம சாஸ்தா குருகுலஅதிபர் பிரம்மஸ்ரீமகாதேவக்குருக்கள் தேவஸ்தான குருகுல உபாத்தியாயரும் பன்மொழி அறிஞருமான சிவஸ்ரீ நாராயண உபாத்தியாயர் ஆகியோரின் சர்வசாதகத்துடன் நிகழும் நைமித்திய, பிரமோற்சவ நிகழ்வுகள் யாவும் ஒழுங்கையும், நேரக் கணிப்பையும், தூய்மையையும் 'சிக்'கெனப் பிடித்து செய்யப்படும். எந்த நேரமும் ஆலயத்தில் அமைதியும், சுத்தமும் பேணப்படும்.

மூலத் தானத்தில் அம்பாளுக்குச் சாத்தப்படும் பட்டாகட்டும்- மடைப்பள்ளியில் அமுது படைக்கும் பாத்திரமாகட்டும் - களஞ்சிய அறையில் ஆயத்தமாகும் அபிடேகப் பொருளாகட்டும்- எந்த நேரமும் எல்லா இடத்திலும் தேவஸ்தானத் தலைவரின் பார்வை கண்காணித்துக் கொண்டே இருக்கும். மறந்தும் தவறுஏற்படா வண்ணம் அனைவரின் கவனமும் ஒருமித்து இயங்கும். ஆலயத்தை நாடி வருவோருக்கு அவரவர் வேண்டும் உதவிகள் உடனுக்குடன் கிடைக்கும் தேன் கிண்ணம் போலச் சிவத்தமிழ்ச் செல்வியின் இன் மொழியும் அறிவுரையும் கிடைக்கும்.

இவற்றிலும்பார்க்க மேலாக எங்கெங்லாம் அழுதரல் கேட்கிறதோ, எங்கிருந்தெல்லாம் தீனக்குரல் அழைக்கிறதோ அங்கெல்லாம் கண்பார்த்து அருள்பவள் இவள். நாடும் இடத்துக்குத் தேடிச்சென்று அபயமும், உபயமும் அருள்வது அன்னையின் கொடைக்கரம் தஞ்சம் அடைந்தவரை 'அஞ்சேல்' என்று காப்பது அவள் திருப்பதம். தெல்லிப்பழை முழுவதுமே இடம் பெயர்ந்து விட்ட போதிலும் 'நீயே கதி' என்று அவளது ஆலய வளாகத்தில் அறுபது பேருக்குமேல் வாழ்கிறார்கள். பிரதான சிவாச்சாரியார் குடும்பத்துடன் ஆலயஅலுவலகத் தொண்டர்அங்குள்ள நித்திய கடமைகளைச் செய்வோர், வயோதிபர்கள் என்போர் இதில் அடங்குவர். அவர்களைக் கண்ணிமைபோல் காப்பது துர்க்கை அன்னையே.

கடந்த பதினொரு ஆண்டுகளாகத் தேவஸ்தானத்தில் அடைக்கலம் புகுந்துள்ள அறுபது பெண் குழந்தைகள் ஆறு வயது தொடக்கம் இருபது வயது வரை உள்ளனர். துர்க்காபுரம் மகளிர் இல்லச் செல்வங்களான இவர்களைத் தூக்கிச் சுமப்பவள் துர்க்கையே தாயினும் நல்ல தலைவியாம் துர்க்கா துரந்தரியின் நேரடிப் பொறுப்பில் அவரால் நெறிப்படுத்தப்பட்டு வளரும் இந்தச் சைவத் தமிழ்த் தளிர்கள் துர்க்காதேவியின் தத்துப் பிள்ளைகள்.

நன்றாகப் பண்பாடி மாலைகள் தொடுத்து திருவலகிட்டுத் தொண்டு புரிந்து கல்வியும் கற்கும் பேறு பெற்றவர்கள் இவ்வில்லச் சிறுமிகள். இவர்கள் மட்டுமல்லாது குடாநாட்டிலும், வெளியிலும உள்ள அனைததுச் சைவச் சிறுவர் இல்லங்களும் பாலர் பராமரிப்பு இல்லங்களும் துர்க்காதேவியின் உபகரிப்பைப் பெறுகின்றன.

கிளிநொச்சிக்குருகுலம், மட்டுநகரில் மங்கையர்க்கரசி இல்லம்திருகோணமலையில் அன்பு இல்லம, மன்னார் துயர்துடைப்பு நிலையம் என்பன இத்தகைய 'உதவிகளைப் பெறுபவை' இத்துடன் பாலர் பாடசாலைகளுக்குத்துழாய்க்கிணறு அமைத்துக் கொடுக்கும் பணியையும் இவ்வாலயம் செய்துள்ளது. இடம்பெயர்ந்த இன்னலுறும்மக்களுக்கும் உதவிகள் வழங்கப்படுகின்றன.

வசதிகள் வாய்ப்புக்கள் குறைந்த ஆலயங்களுக்குப் பட்டுக் குடைவேண்டுமா திருவிளக்குத் தேவையா? பஞ்சாராத்தியா? தேவஸ்தானம் கொடுக்கிறது?

வைத்தியசாலைகளின் அபிவிருத்தியில் கவனம் செலுத்துவதும் இவ் ஆலயமே. மனநோயாளர் விடுதியை நாடிச் சென்று அவர்கள் வயிற்றுக்கும் மனத்திற்கும் விருந்து படைக்கும்கருணையும்உண்டு.

ஆதரவற்றோர். அங்கவீனமுற்றோர் நிம்மதி தேடும் முதியோர். எவர்வந்தாலும் உணவும் உடையும் உபகாரமும் பெற்றுச் செல்வது இந்தத் தலத்திலேயாம்.

அம்பாள் தன் கருணையினால் உலகெங்கும் பலகோடி இதயங்களில் வாழ்கிறாள். வாழ்விக்கிறாள் அன்று சக்கர வடிவில் அவள் அமர்ந்த இலுப்பைவனம் இன்று ''துர்க்காபுரம்'' என்ற எழுச்சிக் கிராமமாகி மிளிர்கிறது என்றால் கோயில்களை மையமாக வைத்து நகரங்கள் தோன்றின என்ற வரலாறு உண்மைதானே. எனவே உயர்வருளும் அன்னைஉழுகுடையில் ஓங்கார மணி ஒக்கத்தேரேறி வருகின்றாள். நாமும் வணங்கி வரம் பெறுவோம்.

சகோதரி பூரணி ஜதீஸ்வரி
துர்க்கா புரம் மகளிர் இல்லம்
தெல்லிப்பழை

## பொற்தே ரேறி வருவாயே!

தெல்லி நகரின் திருத்தாயே!
தேவி எமக்கு அருள்வாயே!
கல்வி செல்வம் வீரமுடன்
கலையும் சேர்த்துஎமக்கருளி
பொல்லா வினையும்
தீர்த்திடவே
பொற்தே ரேறி வருவாயே!

# மண்ணெய் அளவைக் குறைத்தால் பதவி விலகுவேன்

## யாழ். அரசஅதிபர் 'லக்திவ' இதழுககு பேட்டி

யாழ்ப்பாணத்திற்கு மண்ணெண்ணெய் அனுப்புவதை மட்டுப்படுத்தும் தீர்மானம் மாற்றம் செய்யப்படாதெனில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் தன்னால் தொடர்ந்தும்

கர்த்தர் ஜெனரல் ஹமில்ரன் வணசிங்கவினதும் கூற்றின்படி நான் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அவரது, உதவியாளர்

டிருந்தது.

யாழ்ப்பாணக் குடா நாட்டின் உணவுப் பொருள்களின் பற்றிக் குறிப்பிட்ட மாணிக்கவாசகர் அவர்கள் உணவுப் பொருள்களின் தட்டுப்பாடு

## 'குமாரி' 'றுகுணு' அடுத்த வாரத்தில

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டிற்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் 'குமாரி' மற்றும் 'றுகுணு' ஆகிய கப்பல்கள் அடுத்த கிழமை பருத்தித்துறையை வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகின்றது.

'றுகுணு' கப்பலில் 920

BECON
94'A/L DAY CLASS
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

யுடனும். குருஜீசுவாமி ஹரிதாஸ்கிரியின் ஆசைவுடனும், தமிழ்நாடு விழுப்புரத்தைச் சேர்ந்த ஸ்தபதி திரு. ச.தேவலிங்கம் அவர்கள் நிர்மாணித்த இராஜகோபுரத்தின் சிற்பச்சிலை மலிந்த காம்பீரியமான அழகு. கலாகேசரி ஆ. தம்பித்துரையின் கலை நுட்

அனைவருக்கும் சைவ சாஸ்திர விளக்கங்களையும் தோத்திரப் பயிற்சியையும், அருள் விளக்கத்தையும் படைக்கின்றன. சிவராத்திரி போன்ற தினங்களில் பண்ணிசைகளும், சொற்பொழிவுகளும் நல்விருந்தாக அமைகின்றன. கூட்டு

நித்திய பூஜைகளும், இணுவில் தர்ம சாஸ்தா குருகுலஅதிபர் பிரம்மஸ்ரீ மகாதேவக்குருக்கள் தேவஸ்தான குருகுல உபாத்தியாயரும் பன்மொழி அறிஞருமான சிவஸ்ரீ நாராயண உபாத்தியாயர் ஆகியோரின் சர்வசாதகத்துடன் நிகழும் நைமித்திய, பிரமோற்சவ நிக

நேரமும் எல்லா இடத்திலும் தேவஸ்தானத் தலைவரின் பார்வை கண்காணித்துக் கொண்டே இருக்கும். மறந்தும் தவறுஏற்படாவண்ணம் அனைவரின் கவனமும் ஒருமித்து இயங்கும். ஆலயத்தை நாடி வருவோருக்கு அவரவர் வேண்டும் உதவிகள் உடனுக்

கரம் தஞ்சம் அடைந்தவரை 'அஞ்சேல்' என்று காப்பது அவள் திருப்பதம். தெல்லிப்பழை முழுவதுமே இடம் பெயர்ந்து விட்ட போதிலும் 'நீயே கதி' என்று அவளது ஆலய வளாகத்தில் அறுபது பேருக்குமேல் வாழ்கிறார்கள். பிரதான சிவாச்சாரியார் குடும்பத்துடன் ஆலயஅலுவலகத்

கிளிநொச்சிக்குருகுலம், மட்டுநகரில் மங்கையர்க்கரசி இல்லம்திருகோணமலையில் அன்பு இல்லம, மன்னார் துயர்துடைப்பு நிலையம் என்பன இத்தகைய 'உதவிகளைப் பெறுபவை' இத்துடன் பாலர் பாடசாலைகளுக்குக்குழாய்க்கிணறு அமைத்துக் கொடுக்கும் பணியையும் இவ்வாலயம் செய்

வருவாயே!

தெல்லி நகரின் திருத்தாயே!
தேவி எமக்கு அருள்வாயே!
கல்வி செல்வம் வீரமுடன்
கலையும் சேர்த்துஎமக்கருளி
பொல்லா வினையும்
தீர்த்திடவே
பொற்தேரேறி வருவாயே!

# மண்ணெய் அளவைக் குறைத்தால் பதவி விலகுவேன்

## யாழ். அரசஅதிபர் 'லக்திவ' இதழுககு பேட்டி

யாழ்ப்பாணத்திற்கு மண்ணெண்ணெய் அனுப்புவதை மட்டுப்படுத்தும் தீர்மானம் மாற்றம் செய்யப்படாதெனில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் தன்னால் தொடர்ந்தும் பணியாற்ற முடியாதெனக் கூட்டுப்படைத் தலைமையக தளகர்த்தர் ஜெனரல் கமில்ரன் வஜசிங்காவற்கு கூறியதாக யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் அண்மையில் ''லங்காதீப''வுக்கு தெரிவித்துள்ளார்.

சிங்களத் தினசரியான ''லங்காதீப'' விற்கு பேட்டி அளித்த அவர் மேலும் கூறுகையில் யாழ்ப்பாண அரசாங்க அதிபரான தனக்கு, இரு எஜமானர்களின் கீழ் பணியாற்ற வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.

அரச சேவையே தனக்கு வேண்டாமென்று போவதாகக் கூறும் மாணிக்கவாசகர் எவ்விதமாகிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு இதன்மூலம் கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையிட்டும் தான் மிக மகிழ்ச்சியடைவதாகக் கூறினார். யாழ்ப்பாணத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தென்பகுதிப்பாதுகாப்புப் படையினர் 33 பேரை விடுவிப்பது சம்பந்தமாக சென்ற கிழமை நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் பற்றி ''லங்காதீப'' கேட்ட கேள்வி ஒன்றிற்குப் பதில் அளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

புலிகள் இயக்கத்திற்கும், அரசாங்கத்திற்கும் இடையிலிருக்கும் அவநம்பிக்கை நீங்கும் வரை இந்த உத்தியோகத்தர்களை விடுவிக்கும் முயற்சி சாத்தியமாகாது என்றும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

தடைகள், மட்டுப்படுத்தல் இன்றி யாழ்ப்பாணத்திற்கு எரிபொருள் அனுப்பப்படும் பட்சத்தில் மாத்தரம் பாதுகாப்புப்படையினர் 33 பேரும் விடுதலை செய்யப்படுவர் என்றும் புலிகள் இயக்கம் தன்னிடம் தெரிவித்ததாகக் குறிப்பிட்டார்.

''ஜனாதிபதியினதும், கூட்டுப்படைத் தலைமையக தளகர்த்தர் ஜெனரல் ஹமில்ரன் வஜசிங்கவினதும் கூற்றின்படி நான் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அவரது, உதவியாளர் கரிகாலன் என்பவர்களுடன் கலந்துரையாடினேன்.''

''தடுத்து வைக்கப்பட்டிருப்போர்களில் 6 பேரை ஏற்கனவே விடுதலை செய்துள்ளதால் யாழ்ப்பாணத்திற்கு எரிபொருள் சீராக அனுப்புவது அரசாங்கத்தின் கடமையாகுமென அவர்கள் கூறினார்கள். 6 பேர் விடுதலையாகியதன் மூலம் அவர்கள் காட்டிய ஒத்துழைப்புக்குக் கைமாறாக அரசாங்கம் அவ்விதம் நடந்திருக்க வேண்டும் என அவர்கள் கூறினார்கள். தடைகள் மட்டுப்படுத்தல் இன்றி யாழ்ப்பாணத்திற்கு எரிபொருள் அனுப்பப்படும் பட்சத்தில் மாத்திரம் பாதுகாப்புப் படையினர் 33 பேரும் விடுதலை செய்யப்படுவர் என்று புலிகள் இயக்கம் தன்னிடம் தெரிவித்ததாகக் கூறினார்.''

''நான் மீண்டும் கொழும்பிற்கு வந்து இவ்விபரங்களைக் கூட்டுப்படைத் தலைமையகத்திடம் தெரிவித்தேன். தற்சமயம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பும் மண்ணெண்ணெய் மட்டுப்படுத்தப்பட உள்ளதாகவும், மண்ணெண்ணெய் தவிர்ந்த ஏனைய எரிபொருள் எதுவும் யாழ்ப்பாணத்திற்கு அனுப்ப அனுமதிக்க முடியாது என்றும், அங்கு எனக்கு தெரிவிக்கப்பட்டது''.

யாழ்ப்பாணத்திற்கு அனுப்பும் மண்ணெண்ணெயை மட்டுப்படுத்தும் தீர்மானத்தை இட்டு நான் மகிழ்ச்சி அடைய முடியாது. அந்தத் தீர்மானம் மாற்றம் செய்யப்படாதெனில் தொடர்ந்து யாழ்ப்பாண அரசாங்க அதிபராக என்னால் கடமையாற்ற முடியாதென்று நான் அங்கு கூறியிருந்தேன். யாழ்ப்பாணத்தில் மண்ணெண்ணெய் பாவனை பற்றிய புள்ளி விபரங்களை நான் சமர்ப்பித்திருந்தேன். அது பற்றிக் கவனம் எடுப்பதாகக் கூட்டுப்படைத் தலைமையகம் ஏற்றுக்கொண்டிருந்தது.

யாழ்ப்பாணக் குடா நாட்டின் உணவுப் பொருள்கள் பற்றிக் குறிப்பிட்ட மாணிக்கவாசகர் அவர்கள் உணவுப் பொருள்களின் தட்டுப்பாடு இல்லை என்றும், அரசாங்கம் போதுமான அளவு உணவுப் பொருள்களைக் கப்பல் மூலம் அங்கு அனுப்புவதையிட்டு மக்கள் சந்தோசப்படுவதாகவும் கூறினார்.

உணவுப் பொருள்களை அதிகளவு சேகரித்து வைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார் மருந்துப் பொருள்கள் பற்றியும், இங்குள்ள நிலைமை பற்றியும் விபரித்த அரச அதிபர் தேவையான மருந்துப் பொருள்கள் கடைகளில் வாங்கக் கூடியதாக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் போக்குவரத்து பற்றித் தெரிவிக்கையில் டீசல் இன்மையால் மண்ணெண்ணெயில் ஓடக் கூடிய நிலைக்கு பயன்படுத்தப்படும் சீரற்ற வாகனங்கள் உள்ளன. அவை அதிகளவில் புகைக்கின்றன என்று தெரிவித்தார்.

போக்குவரத்து வசதியின்மையால் மக்கள் தடை செய்யப்பட்ட பிரதேசம் என்பதை கவனத்தில் கொள்ளாது ''கிளாலி'' நீரேரி மார்க்கமாகச் செல்லுகின்றனர். கிளாலித் தடையை நீக்கும்படி நான் பலமுறை அரசிடம் கோரியுள்ளேன் என்றும் தெரிவித்தார்.

அரச அதிபர் கீழ்க்கண்டவாறும் குறிப்பிட்டார்: அண்மையில் குண்டுவீச்சுக்கள் இரண்டு யாழ்ப்பாணத்தில் நடந்தன அவற்றில் இறந்தது அப்பாவிப் பொதுமக்களே. ஓரிடத்தில் குண்டு விழுந்ததும் உடனடியாக நான் அங்கு சென்றேன். அங்கு பாடசாலைச் சிறுமி ஒருத்தி தனது கால்கள் இரண்டையும் இழந்த நிலையில் பலியாகி அருகில் உள்ள கோவிலினுள் கிடக்கக் கண்டேன். இரவில் ஒவ்வொரு நாளும் யாழ்ப்பாணத்தில் 'செல்' சத்தம் கேட்ட வண்ணம் இருக்கும்.

## 'குமாரி' 'றுகுணு' அடுத்த வாரத்தில

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டிற்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் 'குமாரி' மற்றும் 'றுகுணு' ஆகிய கப்பல்கள் அடுத்த கிழமை பருத்தித்துறையைவந்து சேருமென எதிர்பார்க்கப்படுகின்றது.

'றுகுணு' கப்பலில் 920 மெற்றிக்தொன் உரமும் குமாரி கப்பலில் ஒரு தொகுதி உணவு மற்றும் அத்தியாவசிய பொருள்களும் எடுத்து வரப்படுகின்றன.

மேற்படி கப்பல்கள் தற்சமயம் கொழும்புத் துறைமுகத்தில் பொருள்களை ஏற்றும் பணியில் ஈடுபட்டுள்ளது. என யாழ் அரச அதிபர் தெரிவித்தார். (பா). (க)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சித் திணைக்களமும் சித்த வைத்தியக் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து நடாத்தும் 'சித்த மருத்துவம் மக்கள் மயப்படுத்தல், என்ற தலைப்பிலான கருத்தரங்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமிமண்டபத்தில் இன்றும் நாளையும்8-30 மணிமுதல் மாலை 4-00 மணிவரை நடைபெறும் இக்கருத்தரங்கிற்கு அரசியற்றுறை துணைப் பொறுப்பாளர் திரு கரிகாலன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார்

## சான்றிதழ் வழங்கலும் ஆரமப வைபவமும்

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் தேசிய தொழிற் பயிற்சி அதிகார சபையுடன் இணைந்து நடாத்தும் சுருக்கெழுத்தாளர் பயிற்சி ஆரம்ப வைபவமும், தேசியஇளைஞர் சேவைகள் மன்றத்துடன் இணைந்தும் தனித்தும் நடாத்திய சுருக்கெழுத்ளர்தா பயிற்சி பெறறவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் வடமராட்சி சுருக்கெழுத்துக் கழக தலைவர் திரு. ச. குலசிங்கம் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவிலே யாழ். செயலக திட்டபபணிப்பாளர் திரு. ச. பதமநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.


# BECON

## 94'A/L DAY CLASS

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

| ஆசிரியர்கள் | பாடங்கள் | செவ்./ வியா. | சனி/ ஞாயிறு |
|---|---|---|---|
| பசில் | வர்த்தகம் | 8—10 | — |
| வரதராஜன் | பொருளியல் | 10—12 | — |
| சௌந்தி | கணக்கியல் | 12—2 | — |
| S S. மனோகரன் | அளவையியல் | — | 10—11 |
| மீரா | தமிழ் | — | 11—12 |
| பாலா | இந்துநாகரிகம் | — | 9—10 |
| பஞ்சாட்சரம் | அரசியல் | — | 8—9 |
| நிரஞ்சன் | கிறிஸ்தவம் | — | 9—10 |
| யோசப் | புவியியல் | — | 10—11 |

ஆரம்பம்: 2. 9. 93 வியாழன் 8.00 மணி

(சி-7285)

## மீண்டும்!

மாணவர்களினதும், பெற்றோர்களினதும்
நன்மதிப்பைப் பெற்ற

"SAFE SCHOOL BUS" சேவ்[f] பாடசாலை பஸ்

பாடசாலை சேவை 01. 09. 1993 புதன்கிழமை ஆரம்பமாகிறது.

சேவை வட்டுக்கோட்டையிலிருந்து ஆரம்பமாகி மாவடி, மூளாய், சுழிபுரம், சித்தன்கேணி, சங்கானை, மானிப்பாய் ஊடாக யாழ். பிரபல பாடசாலைகள் வரை நடைபெறும்.

ஆகக் கூடிய கட்டணமாக 300/- ரூபாவும்,
ஆகக்குறைந்த கட்டணமாக 200/- ரூபாவும்.

விடுமுறை காலங்களில் வழமைபோல் கட்டணம் அறவிடப்படமாட்டாது.
ஒரே குடும்பத்தில் ஒருவருக்கு மேற்பட்டவர்களுக்கு சலுகை உண்டு.
மேலதிக விபரங்களுக்கு:

அ. சிவகாந்தா [சிவா]
M. P. C. S. அருகாமை,
சங்கானை.

(5785)

குலம் கிறீம் ஹவுஸ்
அந்தோனியார் கோவிலடி
மானிப்பாய்.

# தமிழ்நிலா நகைமாடத்தின்

## இரண்டாம் ஆண்டின் உதயம்

தமிழ் நிலாவின் சேவை

தொடர்ந்தும் வளர வாழ்த்தும்

**சகோதர நிறுவனங்கள்**

யாழ். நகரில் கஸ்தூரியார் வீதியில்,

அழகு நிலா நகை மாடம்

# அழகுநிலா
# நகை மாடம்

வான்மதி நகை மாடம்

தமிழ்நிலா நகைமாடத்தின்

ஆண்டு நிறைவையொட்டி

வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகை

புரட்டாதி 1-ம்திகதி முதல் 9-ம் திகதி வரை

வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன்

தெரிவித்துக்கொள்கிறோம்.



எமது ஸ்தாபன வளர்ச்சிக்கு ஆதரவு நல்கிய சகலருக்கும் எமது

வளர்ச்சிக்கு வித்திடுவோம்

உயர்ச்சிக்கு கைகொடுப்போம்

தமிழ்நிலா தொடர்ந்தும்

பிரகாசிக்க வாழ்த்தும்

சகோதர நிறுவனங்கள்

சாவகச்சேரியில்

# தமிழ்ப்பரிதி

அழகுநிலா
நகை மாடம்

வான்மதி
நகை மாடம்

தமிழ்மதி
நகை மாடம்

எமது ஸ்தாபன வளர்ச்சிக்கு ஆதரவு நல்கிய சகலருக்கும் எமது நன்றியையும் நல்லாசியையும் தெரிவித்து தொடர்ந்து வரும் ஆண்டிலும் உங்கள் நகைத் தேவைகளை பூர்த்தி செய்யக் காத்திருக்கும்

தமிழ்நிலா நகை மாடம்

பேருந்து நிலையம், நெல்லியடி.

(சி/7301)

தமிழ்ப்பரிதி
நகை மாடம்

இல.15, புதிய சந்தை
சாவகச்சேரி.

கிளிநொச்சியில்

தமிழரசி
நகை மாடம்

கிளிநொச்சி.

நல்லூர் இலே நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

குத்தும் ஈட்டிகளைக் கொண்டு, மனிதன் தனக்கோர் அரியணையை அமைத்துக் கொள்ளக் கூடும். ஆனால் அதன் மேல் அமர அவனால் முடியாது.

- கமிலோ தெ கவூர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 29-08-1998
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

# இன அழிப்பு ஒன்றே அரசின் இலக்கு

இரு தினங்களாக யாழ். குடாநாடு மீது சிறிலங்காவின் முப்படைகள் கண்மூடித்தனமான தாக்குதலை மேற்கொண்டு வருகின்றன. சிறிலங்காப்படைகளின் இவ் வெறித்தனமான தாக்குதலுக்கு 10க்கு மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டதோடு, பலர் படுகாயம் அடைந்துமுள்ளனர். மேலும், கோவில்கள் வீடுகள், வர்த்தக நிலையங்கள் என்பனவும் சேதமடைந்ததோடு, பல மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துக்களும் நாசமாகியுள்ளன.

அப்பாவித் தமிழ் மக்கள் மீதான சிறிலங்கா அரசாங்கத்தின் இத்தாக்குதலானது திட்டமிட்ட இனப்படுகொலையின் ஓர் அங்கம் என்பதோடு, சிறிலங்கா இராணுவத்தின் கையாலாகாத்தனத்தின் வெளிப்பாடும் எனலாம். அவ்வாறு இல்லாதுவிடில், கோவில்களில் கூட்டமாக நிற்கும் மக்களின் மீதும், மக்களின் குடியிருப்புக்கள் மீதும் தாக்குதல் நடத்தியிருக்கமாட்டாது.

இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வுகாணப்படவேண்டும் என உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இருந்து பல கோரிக்கைகள், வற்புறுத்தல்கள் எழுந்துள்ளபோதும் சிங்கள அரசாங்கம் 'ஒரே தீர்வு இராணுவத் தீர்வு' என்ற நிலைப்பாட்டில் இருந்து மாறவில்லை. இனப்பிரச்சினை போன்ற சிக்கலான பிரச்சினைகளுக்கு இராணுவத் தீர்வு சாத்தியமாகாது என உலகம் தந்த படிப்பினையை சிறிலங்கா அரசாங்கம் ஏற்கவில்லை. ஆனால், சிறிலங்கா வரலாற்றிலும் படிப்பினை பொய்த்துப் போய்விடவில்லை. இராணுவம் தொடர்ந்து தோல்விகளையே சந்தித்து வருகின்றது.

தொடர்ச்சியான இராணுவத் தோல்விகளையும் சிறிலங்கா அரசாங்கத்தால் ஜீரணிக்க முடியவில்லை. தோல்விகளைச் சந்திக்கும் ஒவ்வொரு வேளையிலும் அப்பாவிப் பொது மக்கள் மீது தனது வெறித்தனத்தை காட்ட முயல்கின்றது. அதாவது இராணுவ ரீதியாக விடுதலைப்புலிகளை எதிர்கொள்ளமுடியாத வேளையில், அப்பாவி மக்களைப் படுகொலை செய்து வருகின்றது. ஆனால் இது விடுதலைப்புலிகளின் தாக்குதல் விளைவு அல்ல

# உள்வீதிவலம் இடம்பெற்றபோது ஷெல் ஒன்று வந்து வீழ்ந்தது

## நேரில் கண்டவர் தகவல்

[நமது நிருபர்]

கொடித்தம்ப பூசை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது பொம்மர்கள் ஆகாயத்தில் வட்டமிட்டன. இருந்தபோதிலும் அப் பூசையை தொடர்ந்து வசந்தமண்டபபூசைநடைபெற்று அம்மன் உள்வீதிவலம் வந்து கொண்டிருந்தபோது கலியாணமண்டப பகுதியில் பலத்தசத்தத்துடன் குண்டொன்று வெடித்தது.

இதனைத்தொடர்ந்து 'கலியாண மண்டபப் பகுதியில் ஷெல்லொன்று வீழ்ந்து வெடித்ததில் அன்னதான பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள் இருவர் உடல்சிதறி பலியானதாகவும் பலர்படுகாயம் அடைந்து விட்டதாகவும் அப்பகுதியில் இருந்து ஓடிவந்த தொண்டர் ஒருவர் கூறினார்" இவ்வாறு நேற்றுக் காலை நால்வரைபலிகொண்ட சிறிலங்கா இராணுவத்தினர் வீசிய ஷெல் தாக்குதல் பற்றி துர்க்கை அம்மன் ஆலய இந்து இளைஞர்சங்க உபதலைவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:-

நாங்கள் அவ்விடத்திற்கு சென்றபோது திருவிழாதொடங்கி இதுவரை அன்னதானப் பணிக்கு பொறுப்பாக இருந்த எமது தொண்டர் நவரெட்ணம் இரத்த வெள்ளத்தில் கிடந்தார். அவருடன் உதவியாக நின்ற மகளிர் இல்லத்தைச் சேர்ந்த சிறுமிகள் இருவரும் மற்றும் தொண்டர்களும் அருகருகே இரத்தவெள்ளத்தில் கிடந்தனர்.

நாங்கள் உடனடியாக எல்லோரையும் வாகனம் ஒன்றில் ஏற்றி யாழ் மருத்துவமனைக்கு அனுப்பினோம் அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாது. கோயிலின் சுற்றுப்புற பகுதிகளில் பொம்மர்கள் வீசிய குண்டுகள் வீழ்ந்து வெடித்தது இத்தாக்குதலில் திருமதி இராமநாதன் என்பவர் காலில்காயமடைந்த நிலையில்கோயிலுக்குவந்தார். தொடர்ந்து மேற் கொள்ளப்பட்ட ஷெல்தாக்குதலை அடுத்துபின்கல்யாணமண்டப பகுதியில் ஷெல்கள்வந்து வீழ்ந்து வெடித்தது என்றார். [சி]

# தெல்லிப்பழையில் பலியான பொதுமக்கள் விபரம்

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம் மீது நேற்று சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட அகோர எறிகணைத்தாக்குதலினால் உடல் சிதறிப்பலியான நான்கு பக்தர்களின் உடல்கள் யாழ். போதனாவைத்திய சாலையில் வைக்கப்பட்டிருந்தன.

கந்தையா நவரெட்ணம் (வயது 50) தெல்லிப்பழை, சுமித்திரா செல்வராசா (வயது 12) மணியந்தோட்டம், இருமதி சாந்தராசா பங்கஜம் (வயது 52) துர்க்காபுரம் தெல்லிப்பழை. சிவலை சின்னத்துரை (வயது 58] கட்டுவன், மல்லாகம்.

மேற்படி நால்வரின் சடலங்களும் அடையாளம் காணப்பட்டு உறவினர்களினால் எடுத்து செல்லப்பட்டன என யாழ் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (பா. தி)

# எறிகணைத் தாக்குதலில் காயமடைந்தோர்

(நமது நிருபர்)

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் மீது சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றுக் காலை 10.00 மணியளவில் மேற்கொண்ட அகோர எறிகணைத் தாக்குதலினால் படுகாயமடைந்தோர் விபரம்:-

வி. கமலநாதன் (18வயது) மானிப்பாய் எஸ். ராஜலிங்கம் (42 வயது) தெல்லிப் பழை. எஸ். ஜெயந்தி (14 வயது) தெல்லிப்பழை. எஸ். சிவபரன் (18வயது) தெல்லிப் பழை, வாசன் (22 வயது) தெல்லிப்பழை.

இவர்கள் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டிருந்தனர். [பா]

# ஆலயம் மீதான தாக்குதல் மத அமைப்புகள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை தெல்லிப் பழை துர்க்கையம்மன் ஆலயம் மீது சிறிலங்காப் படையினர் கண்மூடித்தனமாக மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலினால் பொதுமக்கள்கொல்லப்பட்ட சம்பவத்தை இந்து, கிறிஸ்தவ மதச் சங்கங்கள் கண்டித்துள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக எமது செய்தியாளருக்கு கருத்துத் தெரிவித்த தென்னிந்திய திருச்சபையின் யாழ் மறை மாவட்டப் பேராயர் வண. ஜெயநேசன் தாம் இச்சம்பவம் குறித்து கடுமையாக கண்டிப்பதாகத் தெரிவித்தார். ஆலயத்திற்கு வழிபடவந்த அப்பாவி மக்கள்முற்றிலும் நியாயமற்றமுறையில் நேற்று கொல்லப்பட்டிருக்கின்றனர் உலகம் முழுவதிலும் இச்சம்பவம் அதிர்ச்சியைஏற்படுத்தும். முன்னரும் இப்படியானசம்பவங்கள் நடந்துள்ளன. அரசு போர்முனையில் பொதுமக்களுடனல்ல போரிடுவது என்பதைக் கூற விரும்புகிறேன். இத்தாக்குத...

கண்டிக்கின்றோம். நேற்றைய சம்பவத்தில் பல பக்தர்கள் பலியானமை குறித்தும், காயமடைந்தமை குறித்தும் பெரும் மனவேதனை அடைகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தங்கம்மா அப்பாக்குட்டி ஆஸ்பத்திரிக்கு விரைவு

(யாழ்ப்பாணம்)

துர்க்கை அம்மன் கோவில் பகுதியில் வீழ்ந்து வெடித்த எறிகணைகளினால் பலியானவர்களையும், காயமடைந்தவர்களையும் சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிஅவர்கள் பார்வையிட்டார்.

நேற்று யாழ். வைத்திய சாலைக்கு வந்த அவர் சிறிலங்கா இராணுவத்தின் கொடூரமான எறிகணை வீச்சினால் பாதிப்படைந்தவர்களைப்பார்வையிட்டார்.

துர்க்கை அம்மன் ஆலய தர்மகர்த்தாவான அவரது நிர்வாகத்தில் உள்ள மகளிர் இல்லத்தைச் சேர்ந்த செல்வி செ. சுமித்திரா எறிகணை வீச்சினால் பலியானார் என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

# அரச அதிபர் கொழும்பிற்கு அவசர வானொலிச் செய்தி

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம் மீது சிறி... கால வைபவங்கள் தற்பொழுது நடைபெற்று வருவதால் இவ் ஆலயத்தின் மீதும்...

# கிளிநொச்சியில் குண்டுவீச்சு ஒருவர் காயம்

[கிளிநொச்சி]

கிளிநொச்சிப்பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடாத்தியுள்ளனர்.

நேற்றுக்காலை 7-00 மணியளவில் நடாத்தப்பட்ட இத் தாக்குதலினால் ஒருவர் காயமடைந்துள்ளார். சண்முகராசா [வயது 40] என்பவரே காயமடைந்தவராவார். மேலும் சில வீடுகளும், கல்வி நிலையம் ஒன்றும் சேதமடைந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மாவீரர்களுக்கு மக்கள் அஞ்சலி

மாங்குளத்தில் இருந்து நேற்று முன்தினம் முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடன் நடைபெற்ற மோதலின் போது வீரச்சாவடைந்த மூன்று மாவீரர்களுக்கும் நேற்று மக்கள் திரளாகச் சென்று அஞ்சலிசெலுத்தினர். இம் மாவீரர்களது வித்துடல்கள் மல்லாகம் கோட்டைக்காடு பொன் கந்தையா தமிழ்க் கழவன் பாடசாலையில் வைக்கப்பட்டது. இப்பாடசாலைக்கு பெரும் திரளான மக்கள் சென்று மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். மேலும் இப்பாடசாலைமைதானத்தில் அஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றது. இக்கூட்டத்தில் யாழ் அரசியல்துறைப்பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, வலிகாமம் கோட்டமகளிர் அமைப்புப் பொறுப்பாளர்செல்வி சந்திரிகா ஆகியோரும் உரைநிகழ்த்தினர் லெப். பொறையன், 2 ஆம் லெப். மருதவாணன் ஆகியோரது வித்துடல்கள் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது. 2 ஆம் லெப். பொழிலனது வித்துடல் கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படவுள்ளது.

### தேர்த்திருவிழா

தனாலி அந்திரான் முருகமூர்த்தி கோவிலின் வருடாந்த மகோற்சவத்தின் தேர்த்திருவிழா நாளை திங்கட்கிழமை காலையில்நடைபெறவுள்ளது. அதைத்தொடர்ந்து மறுநாள் தீர்த்தோற்சவம் மற்றும் துவஜா அவரோகணம் போன்றவையும் இடம்பெறும்.

# வீடு பார்க்கச்சென்று மிதி வெடியில் பலி

(யாழ்ப்பாணம்)

இல்லாலைப் பகுதிக்கு வீடு பார்க்கச் சென்ற குடும்பப் பெண் ஒருவர் மிதிவெடியில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

திருமதி திரேசா புஸ்பம் என்பவரே இவ்வாறு மிதி வெடியில் சிக்கிஉயிரிழந்தவராவார். மேற்படி பகுதியில் மிதி வெடியில் சிக்கி காயமடைந்த இவரை எவரும் காணவில்லை. இதனால் இரத்தப்பெருக்கு ஏற்பட்டு உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. இவரது சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# மீனவர்கள் மீதும் புக்காரா தாக்குதல்

மாதகல் கடற்பரப்பில் மீனவர் மீது புக்காரா விமானம் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டபோது மீனவர் கடலில் குதித்து தப்பித்துக் கொண்டனர்.

வெள்ளி காலை திருவடி நிழல் கடற்பரப்பில் மூன்று கட்டுமரங்களில் சென்ற பத்து மீனவர்கள் கரையோர மீன்பிடியில் ஈடுபட்டிருந்தனர். அவ்வேளை விரைந்து வந்த புக்காரா விமானம் ஒன்று இவர்கள்மீது தாக்குதலை நடாத்தியபோது அனைவரும் கடலிற்குள் பாய்ந்து தப்பித்துக்கொண்டனர். கடலிற்குள் வீழ்ந்த குண்டொன்று வெடித்ததாக தப்பிய மீனவர் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் தமது கட்டுமரங்கள், வலைகள் என்பனவற்றை கடலில் கைவிட்டு தப்பிவந்ததாக தெரிவித்தனர்.

# வலி.மேற்கில்30க்குமேற்பட்ட வீடுகள், கடைகள் சேதம்

(நமது நிருபர்)

வலி.மேற்கில் வெள்ளியன்று சிறிலங்காவின் முப்படைகளும் இணைந்து நடாத்திய கண்... இதையடுத்து மாலை 2.30 மணியளவில் மாதகல் கடற்பரப்பில் இருந்து பாரிய கடற்படைப் பீரங்கிப் படகொன்று...

இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வுகாணப் படவேண்டும் என உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இருந்து பல கோரிக்கைகள், வற்புறுத்தல்கள் எழுந்துள்ளபோதும் சிங்கள அரசாங்கம் 'ஒரே தீர்வு இராணுவத் தீர்வு' என்ற நிலைப்பாட்டில் இருந்து மாறவில்லை. இனப்பிரச்சினை போன்ற சிக்கலான பிரச்சினைகளுக்கு இராணுவத் தீர்வு சாத்தியமாகாது என உலகம் கூறும் படிப்பினையை சிறிலங்கா அரசாங்கம் ஏற்கவில்லை. ஆனால், சிறிலங்கா வரலாற்றிலும் படிப்பினை பொய்த்துப் போய்விடவில்லை. இராணுவம் தொடர்ந்து தோல்விகளையே சந்தித்து வருகின்றது.

தொடர்ச்சியான இராணுவத் தோல்விகளையும் சிறிலங்கா அரசாங்கத்தால் ஜீரணிக்க முடியவில்லை. தோல்விகளைச் சந்திக்கும் ஒவ்வொரு வேளையிலும் அப்பாவிப் பொது மக்கள் மீது தனது வெறித்தனத்தை காட்ட முயல்கின்றது. அதாவது இராணுவ ரீதியாக விடுதலைப்புலிகளை எதிர்கொள்ளமுடியாத வேளையில், அப்பாவி மக்களைப் படுகொலை செய்து வருகின்றது. ஆனால் இது விடுதலைப்புலிகளின் தாக்குதல் விளைவு அல்ல சிங்களப் பேரினவாதத்தின் வெறித்தனத்தின் வெளிப்பாடாகும். ஏனெனில் சிங்கள பேரினவாதத்தின் இனப்படுகொலை வரலாறு இன்று நேற்று ஆரம்பமானதல்ல.

மண்கிண்டி மலை இராணுவ முகாமை விடுதலைப்புலிகள் நேருக்குநேர் தாக்கி அழித்த போது, சிறிலங்கா இராணுவத்தால் அதற்கு ஈடு கொடுக்க முடியவில்லை. முப்பது நிமிடத்தாக்குதலில் முகாமை இழக்க வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டது விடுதலைப் புலிகளுக்கு எதிரான பதில் தாக்குதல் ஒன்றை நடத்த இராணுவத்தால் முடியவில்லை. ஆனால், கல்வியங்காட்டில், காலையில் பாடசாலைக்கும், சந்தைக்கும் சென்று கொண்டிருந்த அப்பாவி மக்கள் மீது வானத்திலிருந்து தாக்குதல் நடத்துவது மட்டுமே சாத்தியமாகியது மேலும், கிளாலிக் கடலில் நிராயுதபாணிகளாக இருந்த அப்பாவி மக்கள் மீது தமது வெறித்தனத்தைக் காட்டவே முடிந்தது.

இதேபோன்றே, கிளாலிக் கடப்பரப்பில், கடற்புலிகள் நேருக்கு நேர் நின்று மோதி இரு கடற்படைக் கப்பல்களை மூழ்கடித்த போதும், சிறிலங்கா கடற்படை தாக்குப்பிடிக்க முடியாது தப்பி ஓடவேண்டி வந்தது. ஆயுதம் தரித்து நின்ற புலிகளிடம் இருந்து தப்பினால் போதும் என்று அவை ஓடிவிட்டன. ஆனால், இதன் பின்னர் சிறிலங்கா விமானப்படையும், கடற்படையும், தரைப்படையும் இணைந்து அப்பாவி மக்கள் மீது பாரிய தாக்குதலை நடத்திவருகின்றன. இதில் கோவிலில் நின்ற பக்தர்கள், வீதியால் சென்று கொண்டிருந்த முதியோர்கள், சிறுவர்கள் உட்பட பலர் பலியாக வேண்டி உள்ளது.

அதாவது சிங்களப் பேரினவாதத்தைப் பொறுத்து தமிழ் இனம் அழிக்கப்பட்டாக வேண்டும். அது ஆயுதம் தாங்கிய போராளிகளாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. தமிழரின் இறப்பில் அதிகரித்த வீதமும் வளர்ச்சியில் வீழ்ச்சியும் இருந்தால் போதுமானதாகும்.

இந்நிலையில், தமிழ் இனம் தன்னை இன அழிவிலிருந்து காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால் எவ்வளவு விரைவில் விடுதலை அடைய முடியுமோ, அந்தளவிற்கு முயற்சிக்க வேண்டும். அதற்காகப் போராட வேண்டும் இனப்படுகொலையில் சிறிலங்கா அரசாங்கம் ஈடுபடுகின்றதென்பது உலகிற்குத் தெரியும். ஆனால், ஒவ்வொருவரும் தமது நலன் கருதுவதினால் ஒடுக்கப்படும் - அழிக்கப்படும் இனத்திற்கு நேர்மையாக உதவ இதுவரை முன்வரவில்லை. ஆகையினால் எமது பாதுகாப்பை நாமே விரைந்து தேடிக்கொள்ளவேண்டும்

---

கொண்ட எறிகணைத் தாக்குதலினால் பொதுமக்கள் கொல்லப்பட்ட சம்பவத்தை இந்து, கிறிஸ்தவ மதச் சங்கங்கள் கண்டித்துள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக எமது செய்தியாளருக்கு கருத்துத் தெரிவித்த தென்னிந்திய திருச்சபையின் யாழ் மறைமாவட்டப் பேராயர் வண. ஜெயநேசன் தாம் இச்சம்பவம் குறித்து கடுமையாக கண்டிப்பதாகத் தெரிவித்தார். ஆலயத்திற்கு வழிபடவந்த அப்பாவி மக்கள் முற்றிலும் நியாயமற்றமுறையில் நேற்று கொல்லப்பட்டிருக்கின்றனர் உலகம் முழுவதிலும் இச்சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தும். முன்னரும் இப்படியான சம்பவங்கள் நடந்துள்ளன. அரசு போர்முனையில் பொதுமக்களுடனல்ல போரிடுவது என்பதைக் கூற விரும்புகிறேன். இத்தாக்குதலைத் தென்னிந்தியத் திருச்சபை வன்மையாகக் கண்டிக்கின்றது என்று அவர் கூறினார்.

இதுதொடர்பாக யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை விடுத்த அறிக்கையில் அண்மைக்காலமாகப் படையினர் ஆலயங்கள் மீது தாக்குதல் நடத்துவது அதிகரித்து வருகிறது. கடந்த வெள்ளி பறாளாய் கோவில் மீதும், நேற்று சனியன்று தெல்லிப்பழை ஆலயம் மீதும் சிறிலங்காப்படையினர்மேற்கொண்ட தாக்குதலை வன்மையாகக்

---

சதையி[illegible]

ர்ந்தும் இறக்கப்படாமல் அப்படியேகருகிக்கொண்டிருந்தன. பாத்திரங்கள் தூக்கி வீசப்பட்டு நாலாபுறமும் சிதறிக் கிடந்தன.

காயமடைந்தவர்களின் இரத்தம் மரங்களுக்கு அருகிலும், கோவில் வீதிகளிலும் சொட்டுச் சொட்டாக வழிந்து காணப்படுகின்றன.

திருவிழாவை முன்னிட்டு கோவில் முன்பகுதியில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த கடலை வியாபாரிகளும் இனிப்புப் பண்டங்களை விற்பனை செய்வோரும் தமது பொருள்களை அப்படி அப்படியே அள்ளிக் கட்டிக்கொண்டு அவ்விடத்தை விட்டு சென்று விட்டனர். அதனால் வழமையாக திருவிழா காலங்களில் கலகலப்பாக இருந்த அப்பகுதியும் சோபை இழந்து இனிப்புப் பண்டங்களும், கடலைகளும் ஆங்காங்கே சிதறியநிலையில் காணப்படுகின்றன.

கோவில் பிரகாரம் எங்கும் சனநடமாட்டம் அற்றுஎங்கும் வெறிச்சோடிய நிலையில் இருக்கின்றது தொண்டர் நிலையத்தை சேர்ந்த தொண்டர்கள் சிலர் பீதியும் கவலையுடனும் இருப்பதைக்காண முடிந்தது எனவும் தெரிவிக்கின்றனர். (சி)

---

எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ... பட்டிருந்தனர். (...)

## தங்கம்மா அப்பாக்குட்டி ஆஸ்பத்திரிக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

துர்க்கை அம்மன் கோவில் பகுதியில் வீழ்ந்து வெடித்த எறிகணைகளினால் பலியானவர்களையும், காயமடைந்தவர்களையும் சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் பார்வையிட்டார்.

நேற்று யாழ். வைத்தியசாலைக்கு வந்த அவர் சிறிலங்கா இராணுவத்தின் கொடூரமான எறிகணை வீச்சினால் பாதிப்படைந்தவர்களைப்பார்வையிட்டார்.

துர்க்கை அம்மன் ஆலய தர்மகர்த்தாவான அவரது நிர்வாகத்தில் உள்ள மகளிர் இல்லத்தைச் சேர்ந்த செல்வி செ. சுமித்திரா எறிகணை வீச்சினால் பலியானார் என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

## அரச அதிபர் கொழும்பிற்கு அவசர வானொலிச் செய்தி

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம் மீது சிறிலங்கா இராணுவத்தினர் நடாத்திய எறிகணைத் தாக்குதல் குறித்து அவசர வானொலிச் செய்தியொன்றை யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் அரசிற்கு அனுப்பிவைத்துள்ளார்.

நேற்றுக்காலை 10.00 மணியளவில் நடாத்தப்பட்ட எறிகணைத் தாக்குதல் குறித்தும் இத்தாக்குதலினால் நான்கு பக்தர்கள் உயிரிழந்தது குறித்தும் அரச அதிபரின் வானொலிச் செய்தியின் மூலம் அரசின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

மேற்படி ஆலயத்தின் உற்சவ கால வைபவங்கள் தற்பொழுது நடைபெற்று வருவதால் இவ் ஆலயத்தின் மீதும் ஆலய சுற்றாடல் மீதும் இவ்வாறான எறிகணைத் தாக்குதல்கள் நடாத்துவதை தவிர்க்கும் படியும் அரச அதிபர் அரசைக் கேட்டுள்ளார்.

கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகம் மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்கும் அரச அதிபரின் மேற்படி செய்தி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இவ் ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்றைய தினம் நடைபெற இருப்பதால் இராணுவத் தாக்குதல்களை நடாத்த வேண்டாம் என்றும் அரச அதிபரின் செய்தியில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## ராணுவ லெப்டினன்ட் பலி; 8 படையினர் படுகாயம்

மாதகலில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது இராணுவ அதிகாரி ஒருவர் பலியானதாக கூட்டுப் படைத் தலைமையகம் கொழும்பில் தெரிவித்தது.

கொல்லப்பட்ட இராணுவ அதிகாரி லெப்டினன்ட் தரத்தைச் சேர்ந்தவர் என்றும் மேலும் எட்டுப் படையினர் படுகாயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இயக்கச்சியில் நடைபெற்ற மோதலில் இராணுவச்சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் ஆறு பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## புலிகளின் தாக்குதலை தவிர்க்க நடவடிக்கையாம்

யாழ் குடாநாட்டில் சிறிலங்கா இராணுவத்தினர் தற்பொழுது மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கைகள் சிறிய அளவிலானவையாகும் என்று கொழும்பில் இராணுவ அதிகாரிகள் கருத்து தெரிவித்ததாக பி.பி.ஸி தெரிவித்தது.

குடாநாட்டில் காணப்படும் இராணுவ முகாம்களிற்கு மிக அண்மையில் விடுதலைப் புலிகள் வந்து அவற்றின் மீது தாக்குதல் நடாத்துவதைத் தடுக்கும் முகமாகவே இராணுவத்தினர் சிறியளவிலான இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

---

### இரண்டாவது

ஒப்புக் கொண்டதையடுத்து குற்றப்பணம் அறவிடப்பட்டது மற்றும் பணப்பிரச்சினை, திருமணப்பிரச்சினை என்பனவும் விசாரிக்கப்பட்டு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

நேற்று இரண்டாவது தமிழீழ நீதிமன்ற திறப்பு விழாவில் நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா கலந்து கொண்டார். பொதுமக்கள் பலரும் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர். [86]

---

## புக்காரா தாக்குதல்

மாதகல் கடற்பரப்பில் மீனவர் மீது புக்காரா விமானம் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டபோது மீனவர் கடலில் குதித்து தப்பித்துக் கொண்டனர்.

வெள்ளி காலை திருவடி நிழல் கடற்பரப்பில் மூன்று கட்டுமரங்களில் சென்ற பத்து மீனவர்கள் கரையோர மீன்பிடியில் ஈடுபட்டிருந்தனர். அவ்வேளை விரைந்து வந்த புக்காரா விமானம் ஒன்று இவர்கள்மீது தாக்குதலை நடாத்தியபோது அனைவரும் கடலிற்குள் பாய்ந்து தப்பித்துக்கொண்டனர். கடலிற்குள் வீழ்ந்த குண்டொன்று வெடித்ததாக தப்பிய மீனவர் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் தமது கட்டுமரங்கள், வலைகள் என்பனவற்றை கடலில் கைவிட்டு தப்பிவந்ததாக தெரிவித்தனர்.

## வலி.மேற்கில் 30க்குமேற்பட்ட வீடுகள், கடைகள் சேதம்

(நமது நிருபர்)

வலி.மேற்கில் வெள்ளியன்று சிறிலங்காவின் முப்படைகளும் இணைந்து நடாத்திய கண்மூடித் தனமான தாக்குதல்களால் முப்பதிற்கு மேற்பட்ட வீடுகள், கடைகள் என்பன சேதமானதுடன் பல பெறுமதி வாய்ந்த சொத்துக்களும் நாசமாகின.

விமானப் படையினரின் குண்டுவீச்சுத் தாக்குதல்களால் சித்தன்கேணி பகுதியில் வரதராஜ குருக்கள், சர்வகுலராசா ராசேந்திரஐயர் ஆகியோரின் வீடுகளும், சுழிபுரம் மேற்கில் தங்கராசா, தமபிராசா, சின்னப்பிள்ளை, ஞானாம்பிகை, சிவராசா, நாகராசா ஆகியோரின் வீடுகளும்சேதமடைந்தன.

இதையடுத்து மாலை 2.30 மணியளவில் மாதகல் கடற்பரப்பில் இருந்து பாரிய கடற்படைப் பீரங்கிப் படகொன்று மக்கள் நெருக்கமாக வாழும் சுழிபுரம் மேற்கு பகுதிமீது நடத்திய தாக்குதலினால் நாத்தலடிப் பகுதியில் அமைந்துள்ள ஐயனார் கோவிலைச் சூழ அமைந்திருந்த சோமசுந்தரம், சூரியகுமாரி, மாணிக்கம், வீரசிங்கம், கணபதிப்பிள்ளை, சுப்பர், சிதம்பரப்பிள்ளை, ராசதுரை, நாகரத்தினம், பஞ்சலிங்கம், சிவலோகசுந்தரம், செல்லத்துரை, சற்குணராசா, வேலுப்பிள்ளை, நாராயணபிள்ளை, பொன்னுத்துரை, சரவணமுத்து ஆகியோரின் வீடுகளும் வேறுசில வீடுகளும் சேதமடைந்தன.

## கரும்புகையின் மத்தியில் அவலக்குரல்கள் கேட்டன

### உயிர்தப்பிய பெண் தகவல்

[நமதுநிருபர்]

வீட்டிற்குள் வீழ்ந்து படுத்திருந்த போதும் குண்டின் சிதறல்கள் எனது பிள்ளைகளின் உடல்களைக் கிழித்துச் சென்றன.

இவ்வாறு நேற்று முன்தினம் சுழிபுரம் பகுதியில் நடந்த குண்டு வீச்சின்போது படுகாயமடைந்த கிருபாகரன் மற்றும் நகுலாம்பிகை ஆகியோரின் தாயாரான ஞானாம்பிகை நமது நிருபரிடம் தெரிவித்தார்.

மேற்படி குண்டுவீச்சு தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், விமானங்கள் மேலே சுற்றுவதைக்கண்டதும் நாங்கள் எல்லோரும் வீட்டிற்குள் ஓடிப்போய் வீழ்ந்து படுத்துவிட்டோம். சில நிமிடங்களில் வீட்டின் முன்பகுதியில் வீழ்ந்து வெடித்த குண்டிலிருந்து எழும்பிய கரும்புகை வீட்டை முற்றாக மூடியிருந்த வேளை பிள்ளைகளின் அவலக் குரல்கள் கேட்டன. நிலைமையை புரிந்துகொண்ட நான் பிள்ளைகளை காணாது கத்தினேன். இதன்போது பரவியிருந்த புகை என்வாய்க்குள் சென்றதால் என்தொண்டைப் பகுதி அடைத்துவிட்டது. அதனால் என்னால் தொடர்ந்து கத்தமுடியவில்லை. தொண்டை, நெஞ்சு பகுதிகளில் எரிவு உண்டாகியது. புகைஅடங்கிய போது பிள்ளைகள் இரத்த வெள்ளத்தில் துடித்துக் கொண்டு கிடந்தனர், என்றார்.

தனக்கு ஏற்பட்ட நெஞ்சு எரிவு 6 மணித்தியாலங்களாகியும் தொடர்ந்து கொண்டிருப்பதாக அவர் தெரிவித்தார். இளையமகளின் பாதம் பொங்கி காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

---

## அரியாலை படிப்பகம் இரவில் திறந்திருக்கும்

(கொழும்புத்துறை)

அரியாலை சனசமூக நிலையத்தின் படிப்பகம் இரவு 9.00 மணிவரை திறக்கப்பட்டுள்ளது.

மேற்படி இந்நிலையத்தில் அனேக பிள்ளைகள் கல்விகற்க ஜெனரேற்றர் மூலம் மின்சாரம் வழங்கப்படுகிறது. [24]

வாரீர் வாரீர்! ஆதரவு தாரீர்!

## தையல் நிலையத் திறப்பு விழா



இலங்கை செஞ்சிலுவைச் சங்க மீசாலை கிழக்கு அலகின் தையல் நிலையம் 30-08 1993 இல் மாலை 3. 15 மணியளவில் எமது அலகுக் காரியாலயத்தில் வைபவரீதியாக திறந்து வைக்கப்படும். சகல பொது மக்களையும் எமக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

நிர்வாக சபை
(5798)



யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

## "Battle of the Bulge"

**பல்ஜ் சமர்**
(தமிழாக்கம்)

டாங்கிகள் மூலம் மோதிக்கொள்ளும் பயங்கர
**சண்டைக் காட்சிகள் நிறைந்த படம்**

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மணி,
மாலை 4.00 மணி, 6.00 மணி (சி-7114)



# WANTED

Applications are invited from Teachers of English on full - time or part - time basis, for a School with well-disciplined, eager students between the ages of ten and sixteen.

The following categories of teachers may apply:

1. Graduates
2. Trained Teachers
3. A/L with English, HNDE, O/L with Distinction in English.

Those selected from category '3' will be given periodical training and guidance.

Please apply with Bio-data:

Ad. No. 199,
C/o Eelanaatham,
Mahendra Veethy,
Jaffna.

(சி-7282)


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 28-08-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10721

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்:

இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-1375, 26-8917, 22-9193, 41-8432, 42-0962, 24-9489, 22-5812, 28-0523, 27-9692, 41-9327, 24-8429, 27-7542, 26-4139, 41-9659.


## தவறிவிட்டது

நல்லூர் தேர்த்திருவிழா அன்று கைச்செயின் ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. தவறவிட்டவரின் பெயர் பதிமலிங்கம் தயாவதி. இச்செயின் 3 பவுண் இக்கைச்செயினில் லிங்கம் எனப் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இச்செயினைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழுள்ள விலாசத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

பராமசிங்காரம், முரளி வீதி, ஆவரங்கால்
புத்தூர்

அல்லது

ஈழநாதம் காரியாலயத்தில்
ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (5800)



கட்டைவேலி நெல்லியடி ப.நோ கூ.சங்கம்

## கேள்வி

கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தின் மூன்று இசுசு லொறிகள் உள்ளன இவற்றிற்கு பின்வரும் வேலைகளைச் செய்வதற்கான கேள்விகளைச் சமர்ப்பிக்கவும்:

01. முன்போணற் மட்காட் - பெயின்ட் அடித்தல்.
02. உருவுக்கு வாணிஸ்அடித்தல் -07 தரம்

சகல கேள்விகளும் பதிவுத் தபால் மூலம் கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி எனும் விலாசத்திற்கு 05-09-93 ற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்.
25-08-93 (சி-7288)



## கண்ணீர் அஞ்சலிகள்

எமது கல்லூரியின் விஞ்ஞானப் பிரிவு மாணவரான
செல்வன் சா. குமரதேவனின் தாயார்
அமரர் திருமதி

**பங்கஜதேவி சந்திரராசா**

அவர்களின் அகாலமரணம் குறித்து அதிர்ச்சியடைகின்றோம். அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ். இந்துக்கல்லூரி விஞ்ஞான மன்றம்
யாழ்ப்பாணம். (5802)


## விறகு தறிப்பதனை ஒழுங்குபடுத்த

## புதிய நடைமுறைகள்

# புலுட்டுமானோடையில் மூன்று புலிகள் வீரச்சாவு

மட்டக்களப்பு புலுட்டுமானோடை காட்டுப்பகுதியில் கடந்த 23 ஆம் திகதி சென்று கொண்டிருந்த விடுதலைப்புலிகள் மீது இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் மூன்று போராளிகள் வீரச்சாவை தழுவிக்கொண்டனர்.

★ 2 ஆம் லெப். ஜெயக்குமார் (நாகேந்திரன் - ராஜா கொடுவாமடு செங்கலடி)

★ 2 ஆம் லெப். கலாமன் அசோக் (மாணிக்கவாசகம் சுதாகரன், மெயின் வீதி, களுவாஞ்சிக்குடி)

★ வீரவேங்கை சகலன்/விஜி (சாமித்தம்பி விஜயன், மகிளூர் முனை களுவாஞ்சிக்குடி)

இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றனர்.



2 ஆம் லெப். ஜெயக்குமார்



2 ஆம் லெப். கலாமன்



வீரவேங்கை சகலன்

# வலி-வடக்குப் பகுதியில் விமானக் குண்டு வீச்சு

## பெண்மணி காயம், வீடுகள் சேதம்

(தெல்லிப்பழை)

வலிவடக்கில் சிறிலங்கா விமானப்படையின் குண்டு வீச்சு விமானங்கள் நடாத்திய தாக்குதல்களினால் பெண்மணி ஒருவர் காயமடைந்ததுடன் சில வீடுகளும் கடைகளும் சேதமடைந்தன.

நேற்றுக்காலை 8. 30 மணியளவில் மல்லாகம், அளவெட்டி, உடுவில், ஏழாலைப் பகுதிகளை வட்டமிட்ட இரு சியாமாச் செட்டி ரக குண்டு வீச்சு விமானங்கள் துர்க்கை அம்மன் ஆலயம் அருகாமையில் அமைந்திருந்த குடியிருப்புகள் மீது தாக்குதல்களை மேற்கொண்டன.

இவ்விரு குண்டு வீச்சு விமானங்களும் பத்து நிமிடங்களில் அடுத்தடுத்து நான்கு குண்டுகளை வீசின. இவை நான்கும் வீழ்ந்து வெடித்ததில் மூன்று வீடுகளும், மூன்று கடைகளும் பலத்த சேதமடைந்தன. பல பயன்தரும் மரங்களும் சேதமடைந்தன. இதன்போது திருமதி இராமநாதன் என்பவர் காயமடைந்தார்.

(09) (11)

### ஆலயம்

தவர். எறிகணை வீச்சு சில நிமிட இடைவெளியில் விட்டு விட்டு நடத்தப்பட்டதால், மக்கள் உடன் வெளியேற முடியாத நிலை ஏற்பட்டது எனினும் விடுதலைப்புலிகளாலும், செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்களாலும் மக்கள் வாகனங்களில் ஏற்றப்பட்டு பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்பட்டனர் (11) [09] [பா]

### இராணுவத்தின்

சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து அகோர எறிகணைத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

மேற்படி தாக்குதலின் போது இராணுவத் தரப்பினருக்கு ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவரவில்லை.


## இந்துவின் இதய அஞ்சலிகள்

எருமைத்தலை யசுரன் இறக்கும் இடறலிலே
அருமைத் துர்க்கையம்மன் அடியில் சங்குண்ட
பெருமைக்குரிய மலர்ப் பெருந்தாயே பங்கஜமே
இரவின்முடிவிலும் தான் எத்தனையோ,பூவுதிரும்

அருகில் குடியிருந்தே அன்று வழிபட்டதனால்
''அருகில் என்றும் இரு'' என்றே உன்னை அணைத்தாளோ

தாயுன்னோடங்கு சாய்ந்த உயிர்களினால்

on full-time or part-time basis, for a school with well-disciplined, eager students between the ages of ten and sixteen.

The following categories of teachers may apply:

1. Graduates
2. Trained Teachers
3. A/L with English, HNDE, O/L with Distinction in English.

Those selected from category '3' will be given periodical training and guidance.

Please apply with Bio-data:

Ad. No. 199,
C/o Eelanaatham,
Mahendra Veethy,
Jaffna.

(சி-7282)

# முக்கிய அறிவித்தல்

## O.D.O & V.D.O தொடர்பான அறிவித்தல்

அனைத்து ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு (O.D.O & V.D.O) நாடாக்களை பதிவு செய்பவர்கள், வாடகைக்கு கொடுப்பவர்கள், பதிவு நாடாக்களை விற்பனை செய்பவர்கள் அனைவரிற்கும் அறியத்தருவது. இதுவரை தமிழீழக் கலைஞர்களால் உருவாக்கப்பட்ட ஒலி, ஒளி நாடாக்களை (O.D.O & V.D.O) நீங்கள் இலகுவில் பெறக்கூடிய வகையில் யாழ். பழைய பஸ் நிலையத்திற்கு அருகாமையில் உள்ள தமிழீழ வானொலித் தொடர்பகத்துடன் தொடர்பு கொண்டு, தவறாது அனைவரும் எமது ஒலி, ஒளி நாடாக்களைப் பெற்றுக் கொள்ளலாம் என, ''நிதர்சனம்'' அறியத் தருகின்றது.

குறிப்பு:-

தமிழீழத்தில் நடைபெறும் அனைத்து முக்கிய சம்பவங்களையும், பிறநாட்டுச் சம்பவங்களையும் தொகுத்து மாதம் தோறும் எம்மால் வெளியிடப்படும், "ஒளி வீச்சு" V.D.O சஞ்சிகையில் இம்மாதம் விடுதலைப் புலிகளால் "இதயபூமி 1" எனப் பெயரிடப்பட்டு நடாத்தப்பட்ட "மண்கிண்டிமலை இராணுவ முகாம் தகர்ப்பு," "பொலனறுவையில் நடாத்தப்பட்ட இரு தாக்குதல்கள்" என்பவற்றை களத்தில் நின்று நேரடியாகப் பிடிக்கப்பட்ட படங்களையும் தாங்கி வருகிறது, என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அனைவரினதும் ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிறோம்.

**"நிதர்சனம்" நிறுவனம்.**

தொடர்பு:-
தமிழீழ வானொலி
தொடர்பகம்.
யாழ். பழைய பஸ்நிலையம்,
யாழ்ப்பாணம்.

(5799)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1993-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கண்ணீர் அஞ்சலிகள்

எமது கல்லூரியின் விஞ்ஞானப் பிரிவு மாணவரான
செல்வன் சா. குமரதேவனின் தாயார்
அமரர் திருமதி

**பங்கஜதேவி சாந்தராசா**

அவர்களின் அகாலமரணம் குறித்து அதிர்ச்சியடைகின்றோம். அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ். இந்துக்கல்லூரி விஞ்ஞான மன்றம்
யாழ்ப்பாணம்.

(5802)

களும் சேதமடைந்தன.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் மல்லாகம், அவ

## ஆலயம்

தவர். எறிகணை வீச்சு சில நிமிட இடைவெளியில் விட்டு விட்டு நடத்தப்பட்டதால், மக்கள் உடன் வெளியேற முடியாத நிலை ஏற்பட்டது எனினும் விடுதலைப்புலிகளாலும், செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்களாலும் மக்கள் வாகனங்களில் ஏற்றப்பட்டு பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்பட்டனர் (11) [ப9] [பா]

# விறகு தறிப்பதனை ஒழுங்குபடுத்த

# புதிய நடைமுறைகள்

யாழ். குடாநாட்டிலே விறகுக்காகக் கண்டபடி மரங்கள் தறிப்பதனை ஒழுங்குபடுத்துவதோடு மீள் நடுகையினையும் மேற்கொள்ளும் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன்படி எதிர்வரும் 01-09-93-ம் திகதி முதல் விறகு கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடைமுறைப்படுத்தவுள்ளது.

**நடைமுறைப்படுத்தப்படவுள்ள விதிமுறைகள் வருமாறு:**

01. கூடுதலாக காட்டுமரங்கள் தறிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதை தவிர்த்து ஒருமுகப்படுத்தும் வகையில் தென்மராட்சியில் ஒரு விறகு விற்பனை நிலையம் அமைக்கப்பட்டு விறகுகள் கொள்வனவாளர்களுக்கு வழங்கப்படும்.

02. 1) மேற்படி நிலயத்தில் கொள்வனவு செய்து கொண்டு வருவதற்கான அனுமதிப் பத்திரத்தை கொள்வனவாளர்கள் பளை வட்டத் தொடர்பாளரிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

2) உள்ளூரில் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு விறகு எடுத்துச் செல்வதாக இருந்தாலும் அனுமதிப்பத்திரம் பெறவேண்டும். இதற்கான அனுமதி கோரும் விண்ணப்பப்படிவத்தை அவ்வப்பகுதி வட்டத் தொடர்பாளரிடம் இருந்து பெற்று பூர்த்தி செய்து கொடுத்தல்வேண்டும்.

03. போக்குவரத்து அனுமதிப்பத்திரம் கோரும் விண்ணப்பதாரியிடம் இருந்து விறகின் அளவுக்கு ஏற்ப நிதி அறவிடப்படும். இந்நிதி திட்டமிட்ட வகையில் மரக்கன்றுகள் மீள்நடுகைக்கு பயன்படுத்தப்படும்.

04. வழங்கப்படும் அனுமதிப்பத்திரமானது வழங்கப்பட்ட நேரத்திலிருந்து 24 மணி நேரத்திற்கு செல்லுபடியாகும். இதனை ஒரேயொரு தடவை மட்டுமே பயன்படுத்தமுடியும். வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமானது விறகு கொண்டுசெல்லும் முன்னரே காலாவதியாகும்போது அனுமதி வழங்கிய வட்டத்தொடர்பாளரினால் உறுதிப்படுத்தப்பட்டு புதுப்பிக்கப்படடல்வேண்டும்.

05. அனுமதியின்றி விறகு கொண்டுசெல்வது இனம் காணப்படும் பட்சத்தில் தமிழீழ காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு. கொண்டுசெல்லும் விறகின் 3 மடங்கு பணம் அறவிடப்படுவதுடன் விறகும் பறிமுதல் செய்யப்படும்.

06. ஒவ்வொரு வட்டங்களிலும் நிதித்துறையால் பதிவுசெய்யப்பட்ட விறகு விற்பனை நிலையங்களில் நுகர்வோர் தத்தமது தேவைக்காக கொள்வனவு செய்யும்போது அந் நிலையத்தால் வழங்கப்படும் பற்றுச்சீட்டுடன் கொண்டுசெல்ல அனுமதிக்கப்படுவர். (இதற்கு பிரத்தியேக அனுமதிப்பத்திரம் தேவைப்படாது)

07. தென்னை, பனை மட்டைகள், தேங்காய் மட்டைகள், கதிபால்கள், ஊமல் போன்றன கொண்டுசெல்வதற்கு அனுமதிப்பத்திரம் பெறப்படத் தேவையில்லை.

08. அனுமதி பெறப்படாது கொண்டு வரப்பட்ட விறகுகள் காவல் துறையினரால் பறிமுதல் செய்யப்படுமிடத்து இந்த விறகுகள் அல்லது மரங்கள் பொது ஏலத்தில் விடப்படும்;

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பான மேலதிக விபரங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வட்டத் தொடர்பாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(சி/7307)

மேற்கொண்டன.

இவ்விரு குண்டு வீச்சு விமானங்களும் பத்து நிமிடங்களில் அடுத்தடுத்து நான்கு குண்டுகளை வீசின. இவை நான்கும் வீழ்ந்து வெடித்ததில் மூன்று வீடுகளும், மூன்று கடைகளும் பலத்த சேதமடைந்தன. பல

இராணுவத்தின்

சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து அகோர எறிகணைத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

மேற்படி தாக்குதலின் போது இராணுவத் தரப்பினருக்கு ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவரவில்லை.

# இந்துவின் இதய அஞ்சலிகள்

எருமைத்தலை யசுரன் இறக்கும் இடறலிலே
அருமைத் துர்க்கையம்மன் அடியில் கசங்குண்ட
பெருமைக்குரிய மலர்ப் பெருந்தாயே பங்கஜமே
இரவின்முடிவிலும் தான் எத்தனையோ, பூவுதிரும்

அருகில் குடியிருந்தே அன்று வழிபட்டதனால்
''அருகில் என்றும் இரு'' என்றே அன்னை அணைத்தாளோ

தாயுன்னோடங்கு சாய்ந்த உயிர்களினால்
தீயொன்று மூளும்! அதில் தெரிந்திடுவாள் வெற்றியன்னை.

எமது கல்லூரி மாணவனான சா. குமரதேவனின் அன்புத் தாயாரான

அமரர்
திருமதி

**பங்கஜதேவி சாந்தராசா**

அவர்களிற்கு எமது இதய அஞ்சலிகளை சமர்ப்பிக்கின்றோம்.

ஆண்டு 13c
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி (கணிதப்பிரிவு)
யாழ்ப்பாணம். ஆசிரியர், மாணவர்கள்.

(5801)

# மரண அறிவித்தல்

## சிவலை சின்னத்துரை

(கட்டுவன்)

கட்டுவன் மேற்கை பிறப்பிடமாகவும் சுதுமலை ஐங்கரன் வீதியில் வசித்தவருமான சிவலை சின்னத்துரை நேற்று தெல்லிப்பழையில் அகால மரணமானார்.

அன்னார் இராசமணியின் அன்புக்கணவரும், தனபாலசிங்கம் [தெல்லிப்பழை பல நோ.கூ.சங்கம்], தவராசா, தெய்வேந்திரம், புஸ்பமலர் [பிரான்ஸ்], அரியமலர், இராசமலர், ஜீவமலர், விசயமலர், உதயமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், கதிரவேல், முருகேசு, மார்க்கண்டு, செல்லையா ஆகியோரின் அன்புச்சகோதரரும், சிவவடிவேல் [லெபனான்], தம்பித்துரை [பிரான்ஸ்], பரமேஸ்வரி, ரவி ஆகியோரின் அன்பு மாமனாரும், அருந்ததி [பிரான்ஸ்], பிறின்சியா [பிரான்ஸ்], கிருஷ்ணவேணி [பிரான்ஸ்], பாலகிருஷ்ணன் [பிரான்ஸ்], ஜெயதாஸ், பிரிந்தா, நிமால், ஆசா, ஜெனி, கபில், தனுஜா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று நண்பகல் 12 மணியளவில் சுதுமலை இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறேன்.

தகவல்:
தெய்வேந்திரம் (மகன்)

(5803)